ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ டிசம்பர். 10, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 66 ❖ ரூ.10

## ‘மிக்ஜாம் புயல்’ வெள்ளம் பாதித்த மக்களுக்கு ரூ.6,000

# நிவாரண உதவி

## அந்தந்த பகுதிகளில் உள்ள நியாய விலை கடைகளின் மூலம் ரொக்கமாக வழங்கப்படும் : முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை, டிச. 10–

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதியாக ரூ.6000 வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்த தொகை அந்தந்த பகுதிகளில் உள்ள நியாய விலை கடைகளின் மூலம் ரொக்கமாக வழங்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. மேலும், பல்வேறு இழப்பீடுகளையும் நிவாரண உதவிகளையும் தமிழகஅரசுஅறிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில்: மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், தலைமைச் செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். வெள்ள சேதம் குறித்தும், வழங்கப்பட வேண்டிய நிவாரணத் தொகை குறித்தும் இந்த ஆலோசனைக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதனடிப்படையில், மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 6 ஆயிரம் வழங்கிட மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்த நிவாரணத்தொகையினை, பாதிக்கப்பட்டவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளின் மூலம் ரொக்கமாக வழங்கிட முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இழப்பீடுகள் விவரம்: புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, இழப்பீட்டுத்தொகையை ரூபாய் 4 லட்சத்திலிருந்து, 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும், சேதமடைந்த குடிசைகளுக்காக ஏற்கெனவே வழங்கப்படும் தொகை ரூபாய் 5 ஆயிரத்தினை, ரூபாய் 8 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும்,மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) நெற்பயிர் உள்ளிட்ட இறவைப் பாசனப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/–லிருந்து, ரூபாய் 17 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும், பல்லாண்டு பயிர்கள் மற்றும் மரங்கள் சேதமுற்றிருப்பின் (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) இழப்பீடாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 18 ஆயிரம் ரூபாயிலிருந்து, ரூபாய் 22,500/–ஆக உயர்த்தி வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மழையினால் பாதிக்கப்பட்ட (33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாக) மானாவாரிப்

4ம் பக்கம் பார்க்க

## வடுகப்பட்டி பாலின வள மையம் வானவில் மைய கட்டிடத்தினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்



விராலிமலை , டிச. 10–

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டாரம், வடுகப்பட்டி ஊராட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், பாலின வள மையம் வானவில் மைய கட்டிடத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று நடைபெற்ற விழாவில் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து, பாலின வன்முறை தவிர்த்தலுக்கான பிரச்சார உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டு, பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் நிதியுதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்தவகையில் பொதுமக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றையதினம் விராலிமலை வட்டாரம், வடுகப்பட்டி ஊராட்சியில், பாலின வள மையம் வானவில் மைய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அறிவிப்பிற்கிணங்க, அனைத்துமாவட்டங்களிலும் ஒரு ஜிஆர்சி மையம் ஆரம்பித்தல் என்பது அரசு அறிவிப்பில் ஒரு முக்கியமான அங்கமாக உள்ளது. வட்டாரம் மற்றும் ஊராட்சி அமைப்புகள் மூலம் முதன்மையான பாலின பாகுபாடு பிரச்சனைகளை அடையாளம் கண்டு, அங்கீகரித்து, தீர்வு காண்பதற்கு ஆலோசனை வழங்குவதன் மூலம் பெண்களின் நிலை மற்றும் சமூகத்தின் நிலையை உயர்த்தும் அடிப்படையில் செயல்படுவதே பாலின வள மையத்தின் நோக்கமாகும்.

விராலிமலையில் அதிகளவில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் ஏற்படுவதாலும், அவ்வாறு ஏற்படும் கொடுமைகள் வெளியில் தெரியாமல் மறைக்கப்பட்டும் வருகிறது. மேலும் பெண்களுக்கு இளம் வயதில் திருமணம், சிறு குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை, குடும்பத்தில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள், 14 வயதிற்கு மேற்பட்ட பெண்கள், குழந்தைகள் பாலின தொல்லைகள் போன்றவைகள் ஏற்படுவதை தடுப்பதே ஆகும்.

தமிழ்நாடு முதலமைச்சரால் செயல்படுத்தப்படும் இது போன்ற நலத்திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பெற்று தங்களது வாழ்வின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர் பாலின வன்முறை தவிர்த்தலுக்கான பிரச்சார உறுதிமொழியான, ‘நமது சொல்லாலும், செயலாலும் எந்த ஒரு பெண்ணுக்கும், குழந்தைக்கும் மனரீதியாகவோ, உடல்ரீதியாகவோ பாதிப்பு நேராத வகையில் நடந்து கொள்வோம். நமது கவனத்திற்கு வரும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள், வன்முறைகள் மற்றும் எந்த ஒரு பாதிப்பையும் தடுப்பதற்கான முழு முயற்சியில் ஈடுபடுவோம். அத்துடன் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வோம். நமது கிராமங்களில் குழந்தைத் திருமணம் நடைபெறா வண்ணம் விழிப்புடன் இருப்போம். குழந்தை திருமண ஏற்பாடு குறித்து தெரிய வந்தால் 1098 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு உடனே தடுத்து நிறுத்துவோம்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பாலின சமத்துவ மன்றத்தின் மூலம் பெண்களுக்கும்,

2ம் பக்கம் பார்க்க

## வருந்துகிறோம்



புதுக்கோட்டை

திருவப்பூர் சௌராஷ்ட்ரா கீழவீதியில் வசித்து வந்த

P.V.R. நிறுவனங்களின் நிறுவனர்

### திரு.P.வீரப்ப வேளார்

அவர்கள் 08.12.2023 அன்று இரவு இயற்கை எய்தினார்.

இறுதி ஊர்வலம் நல்லடக்கம் 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் P.VR.திருமண மண்டபத்திற்கு பின்புறம் அமைந்துள்ள எங்களது இல்லத்திலிருந்து நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வருத்தத்துடன்...

**மகள்கள்-மருமகன்கள்**

தெய்வத்திரு M.ராஜேந்திரன் - நலமுடன் சாவித்திரி, சூரக்குடி
C.சிவசுப்பிரமணியன்- மணிமேகலை, பொன்னமராவதி
S.ராதாகிருஷ்ணன்- வளர்மதி காரைக்குடி
S.ரவிக்குமார்- மலர்க்கொடி, மதுரை

திருமதி P.VR.லெட்சுமி அம்மாள்
P.VR.சேகரன்-சுமதி
P.VR.இளஞ்செழியன்-எழிலரசி
R.கனகராஜ்-சங்கீதா
S.அரவிந்த் - சூர்யா
I.யாழினி, I.தென்றல்
K.கவின், K.நிலன், A.இனியாள்

**பேரன்கள், பேத்திகள் மற்றும் P.VR.நிறுவனங்கள்**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13.03.1935 | மறைவு : 10.12.2018

திருமதி.
### ஜெயராமு ஆச்சி
அவர்கள்

செட்டிவிடுதியின் சீமாட்டி- எங்கள்
சிந்தை நிறைந்த பெருமாட்டி.
அகத்தின் உள்ளிருந்து ஒளியூட்டி- எங்கள்
ஆயுளுக்கும் அவரே வழிகாட்டி.

நினது திருமலரடி வணங்கி...

டாக்டர் T. செல்வராஜன் மு. ராஜசுலோசனா (மகள்)
கவிஞர். தங்கம் மூர்த்தி (மருமகன்)
ஆசிரியை Rtn. அஞ்சலிதேவி தங்கம் மூர்த்தி (மகள்)
மற்றும் பேரக்குழந்தைகள்

புதுக்கோட்டை

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

போராடி தோற்பதும்
வாழ்வின் ஒரு
அங்கம் என்பதை
மறந்துவிடாதீர்கள்...!




### புளியங்குடி அரசு பெண்கள் பள்ளியில்

## மருதம் பயிற்சி மையம் மற்றும் மக்கள் உதவி கூட்டமைப்பு சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்

தென்காசி.டிச.10–

தென்காசி மாவட்டம் புளியங்குடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மருதம் மாடசாமி கலைவாணி தொண்டு அறக்கட்டளை, மக்கள் உதவி கூட்டமைப்பு, மற்றும் சங்கரா கண் மருத்துவமனை மூலம் இலவச கண் மருத்துவ முகாம் நடைப்பெற்றது. இதில் தலைமை மருதம் மாடசாமி கலைவாணி தொண்டு அறக்கட்டளை மற்றும் மருதம் பயிற்சி மையம் ஒருங்கிணைப்பாளர்மா.கற்பக ராஜா தலைமை தாங்கினார்.

மக்கள் உதவி கூட்டமைப்பு நிர்வாகிகள் மணி, தொழிலதிபர்செய்யது சாகுல் ஹமீது, ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் சங்கத் தலைவர் அசன் ஆடிட்டர் ஆகியோர் முன்னிலை வகித்தனர், மருதம் மாடசாமி கலைவாணி



தொண்டு அறக்கட்டளை செயலாளர் மு.சுரேஷ்குமார் வரவேற்புரை ஆற்றினர், சிறப்பு அழைப்பாளராக தொழிலதிபர் பாலசுப்ரமணியன் என்ற ராஜா, மருதம் பயிற்சி மைய ஆசிரியர்கள் க.சுந்தர் ராஜ், அறக்கட்டளை தலைவர் இந்துமதி, முகேஷ் சிங், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்இராஜேஸ்வரி, வி.ஆர். முருகேசன், செ.தமிழ் பிரியன், கிருஷ்ணகுமார், மகேஷ் குமார், சுரேஷ்குமார், மாரிராஜ், சிவக்குமார், துரை, மகேந்திரன், மனோகர், சுரேஷ், காளிராஜ், சந்தோஷ், பரத், இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் 200 நபர்கள் சிகிச்சை பெற்றனர், இந்த முகாமில் மக்கள் உதவி கூட்டமைப்பினர் பேசுகையில் புளியங்குடி இனி வரும் காலங்களில் பிரதி மாத கடைசி சனிக்கிழமை சங்கரா கண் மருத்துவமனை மூலம் இலவசமாக கண் சிகிச்சை முகாம் நடைபெறும் என்று கூறினார், முகாமின் நிறைவாக வருவாய்துறை அதிகாரி பா. அருண்குமார் நன்றியுரை கூறினார்.

## "சமூக வலைதளங்களின் வளர்ச்சியால் உலகம் முழுவதும் வெறுப்புணர்வு அதிகரித்திருக்கிறது"

### உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி ஒய் சந்திரசூட் தகவல்

மும்பை : டிச. 10, சமூக வலைதளங்களின் வளர்ச்சியால் சகிப்புத்தன்மையற்ற சமூகம் உருவாகி, உலகம் முழுவதும் வெறுப்புணர்வு அதிகரித்திருப்பதாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி ஒய் சந்திரசூட் கருத்து தெரிவித்திருக்கிறார்.

மும்பையில் நடைபெற்ற ஜம்னாலால் பஜாஜ் விருது வழங்கும் விழாவில் உச்ச நீதிமன்றதலைமைநீதிபதிடிஒய் சந்திரசூட் கலந்துகொண்டார். சுதந்திரத்திற்குப் பிறகான இந்தியாவின் பயணம் மிக தனித்துவமானது என்பது குறித்து விவரித்த அவர், " சமீப காலமாக உலகம் முழுவதும் பிரிவினைவாதமும், வெறுப்புணர்வும் காட்டுத்தீயைப் போல பரவி வருகிறது. சமூக வலைதளங்களின் வளர்ச்சியால் சகிப்புத்தன்மையற்ற சமூகம் உருவாகி, உலகம் முழுவதும் பிரிவினை அதிகரித்திருக்கிறது.

உலகம் முழுவம் வலது, இடது, மையம் என பிரிந்துகிடக்கிறது. இதில் வெறுப்புணர்வும்,பிரிவினைவாத கருத்துக்களும் பரவி வருகிறது. இதே நிலை இந்தியாவிலும் விதிவிலக்கல்லாமல் தொடர்கிறது. சமூக வலைத்தளங்களின் வளர்ச்சி. கருத்துகளை ஆராய்ந்து அறியாமல் மேலோட்டமாக பார்க்கும் இளைஞர்களின் மனப்பான்மை, மற்றும் சமூகங்களுக்கிடையே சகிப்புத்தன்மையற்றதுமே முக்கிய காரணம். மேலும் இது சரிவர தொழில்நுட்பத்தை பயன்படுத்த தவறியதன்



விளைவு.

இந்தியாவுடன், பல நாடுகள் 75 ஆண்டுகளுக்கு முன்பு காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றன. ஆனால் அவற்றில் பல நாடுகள் உண்மையான தன்னாட்சியை நிலைநிறுத்த முடியவில்லை, அதே நேரத்தில் இந்தியாவால் அதன் ஜனநாயகத்தை நிலைநிறுத்த முடிந்தது. மற்ற நாடுகளுடன் ஒப்பீடுகளில் இந்தியா தன்னாட்சி மற்றும் ஜனநாயகத்தை பேணிக்காப்பதில் மேன்மையுடன் செயல்படுகிறது. இதற்கு காரணம், இந்தியா பிற நாடுகளைப் போல் அல்லாமல் ஜனநாயக கோட்பாடுகளை முழுமையாக உள்வாங்கியது மற்றும் அனைவருக்குமான அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கியதே என சிலர் கூறுகின்றனர். பலதரப்பட்ட கலாச்சாரங்களை பின்பற்றுபவர்களையும் தாய் உள்ளத்தோடு அணைத்துக்கொண்டதுதான் இதற்கு காரணம் என மற்றும் சிலரும் கூறலாம். பலதரப்பட்ட கலாச்சாரம் மற்றும் அதை புரிந்து கொண்டு கருத்துகளை தெரிவிக்கும் தன்மை இந்தியாவை மற்ற ஜனநாயக நாடுகளில் இருந்து வேறுபடுத்தி காட்டுகிறது. ஒரு சிறந்த சமுதாயத்தை அமைக்க முழு மனதோடு பொது சேவை செய்யும் தன்னார்வலர்களால்தான் முடியும். அந்தப் பாதையை தேர்வு செய்ய தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாழ்வுகளில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதை ஒரு சிலரால் மட்டுமே கடக்க முடியும், அதோடு முழு மனதோடு பொது சேவையிலும் ஈடுபடவும் முடியும்.

நீதிபதிகள் பல நேரங்களில் அநீதிகளை நேருக்கு நேர் எதிர்கொள்கிறார்கள். அவற்றை சட்டத்தின் வழியில் தீர்வு கண்டு, சிறந்த சமுதாயத்தை உருவாக்க ஒவ்வொரு முறையும் முயலும் போது, பல தடைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது" என்றார்.




## வடுகப்பட்டி பாலின வள மையம்... முதல் பக்க தொடர்ச்சி

குழந்தைகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம். எந்த ஒரு பெண்ணுக்கு குடும்ப வன்முறை நிகழ்ந்தாலும் உடனடியாக 1091, 181 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு உரிய ஆலோசனை பெற்று தகுந்த நடவடிக்கை எடுக்க உறுதுணையாக இருப்போம். பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை, குழந்தை திருமணம் உள்ளிட்ட பாலின அடிப்படையிலான வன்முறை எந்த வடிவில் நிகழ்ந்தாலும் பாரபட்சமின்றி குரல் கொடுத்து உரிய தீர்வு பெற்றுத் தர உடனிருப்போம்" என்ற உறுதிமொழியினை, அமைச்சர் ரகுபதி வாசிக்க அதனை பின்தொடர்ந்து, அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், விராலிமலை ஒன்றியக்குழுத் தலைவர் காமு.மு.பி. மணி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் தெய்வநாயகி, உதவி திட்ட அலுவலர் ஜெயராமன், சர்மிளா, ராஜா முகமது, சசிக்குமார், மகாதேவி, ஒன்றிய குழு உறுப்பினர் சத்தியசீலன், வட்டாட்சியர் கருப்பையா, வட்டார வளர்ச்சி அலுவலர் சுவாமிநாதன், ஊராட்சிமன்றத் தலைவர் ஜெயலட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### பெட்ரோல் குண்டு வீசப்பட்ட விவகாரம்

## ரவுடி கருக்கா வினோத்தை 5 நாள் காவலில் விசாரிக்க என்.ஐ.ஏ. மனு

சென்னை : டிச. 10, ரவுடி கருக்கா வினோத்தை 5 நாள் காவலில் விசாரிக்க அனுமதி கோரி பூவிருந்தவல்லி சிறப்பு நீதிமன்றத்தில் என்.ஐ.ஏ. மனு தாக்கல் செய்துள்ளது.

கடந்த அக்டோபர் 25ம் தேதி சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை மீது ஒரு நபர் பெட்ரோல் குண்டுகளை வீச முயன்றார். ஆளுநர் மாளிகையின் வெளியே பாதுகாப்புக்காக நின்றிருந்த போலீசார் அந்த நபரை மடக்கிப் பிடித்தனர். அதற்குள் அவர் வீசியபெட்ரோல் குண்டுகள் மாளிகைக்கு வெளியே விழுந்தன. மேலும், அவரிடம் இருந்த 2 பெட்ரோல் குண்டுகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.

பின்னர், அவரைக் கைது செய்த போலீசார் அவரிடம் விசாரணை நடத்தினர். விசாரணையில், அவர் சரித்திரப் பதிவேடு குற்றவாளியான நந்தனம் எஸ்.எம்.நகரை சேர்ந்த ரவுடி கருக்கா வினோத் என்பதும், இவர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து, போலீசார் கருக்கா வினோத் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து சிறையில் அடைத்தனர். மேலும், அவர் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக என்.ஐ.ஏ. அதிகாரிகள் குழு நேற்று சம்பவ நடைபெற்ற கிண்டி ஆளுநர் மாளிகை இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். ரவுடி கருக்கா வினோத்தை 5 நாள் காவலில் விசாரிக்க அனுமதி கோரி பூவிருந்தவல்லி சிறப்பு நீதிமன்றத்தில் என்.ஐ.ஏ. மனு தாக்கல் செய்துள்ளது. சம்பவம் நடந்த அன்று கருக்கா வினோத் ஆளுநர் மாளிகை மீது பெட்ரோல் குண்டு வீசியதை பார்த்ததாக கூறும் ஆயுதப்படை காவலர் சில்வானிடமும் என்.ஐ.ஏ. விசாரணை நடத்தினர். ஆயுதப்படைகாவலர்சில்வானை புரசைவாக்கத்தில் உள்ள என்.ஐ.ஏ. அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடைபெற்றது.

### மழைநீர் வடிகால் கட்டாமல் இருந்திருந்தால்

## சென்னை 10, 20 நாட்கள் தண்ணீரில் மூழ்கியிருக்கும் : தயாநிதி மாறன் எம்பி பேட்டி

சென்னை : டிச. 10, மழைநீர் வடிகால் கட்டாமல் இருந்திருந்தால் சென்னை 10, 20 நாட்கள் தண்ணீரில் மூழ்கியிருக்கும் என்று தயாநிதி மாறன் எம்பி கூறியுள்ளார்.

சென்னையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அன்னை சத்யா நகர் பகுதியில் வசிக்கும் 1100 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணநலத்திட்ட உதவிகள் மற்றும் உதவி தொகை வழங்கும் நிகழ்ச்சி பிராட்வே ராஜா அண்ணாமலை மன்றத்தில் நேற்று காலை நடந்தது. அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினர். தொடர்ந்து மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அளித்த பேட்டி:

இது வரை சென்னை பார்த்திராத பெரும் மழையை நாம் பார்த்தோம். அதனால், எதிர்பாராத விதமான இயற்கையின் சீற்றத்தின் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.



ஆனாலும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே சென்னையில் மழைநீர் கால்வாய்களை கட்டியதால், ஒன்னரை நாளில் 90 சதவீதம் பகுதிகளில் மழை நீர் வடிந்து விட்டது. 2015ல் பாத்தீர்கள் என்றால் மழைநீர் வடிய கிட்டத்தட்ட 10 நாட்கள் ஆனது. எங்களை தொடர்ந்து மக்கள் பணியில் ஈடுபட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். அதன்படி தொடர்ந்து நிவாரண உதவிகளை எங்களால் முடிந்த அளவுக்கு செய்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக மத்திய சென்னையில் 100 சதவீதம் மின்சாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மின்கசிவு ஏற்பட்டு எந்த உயிர் பாதிப்பும் ஏற்படக்கூடாது. அதனால், நாங்கள் முன்எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்கிறோம்.

சென்னை முழுவதும் நிரந்தர தீர்வு காண வேண்டும் என்பதற்காக மழைநீர் வடிகால்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைத்தார். ஆனால், கிட்டத்தட்ட 47 ஆண்டுகளுக்கு முன்பு கூட இவ்வளவு மழை பெய்யவில்லை. 20 சென்டி மீட்டர் அளவுக்கு தாங்கக்கூடிய மழைநீர் கால்வாய்களை பண்ணினோம். பெய்ததோ 48 சென்டி மீட்டர் அளவுக்கு மழை. இது பேய் மழை. சென்னை மாவட்டத்துக்கு மட்டுமல்ல சுற்றியுள்ள 3 மாவட்டத்திலும் மழை பெய்துள்ளது. ஆயினும் இந்த வடிகால்வாய் கட்டாவிட்டால் சென்னை இன்னும் கிட்டத்தட்ட 10, 20 நாட்கள் தண்ணீரில் மூழ்கியிருக்கும். இப்போது பல முக்கால்வாசி இடங்களிலே அடுத்த 24 மணி நேரத்திலே தண்ணீர் வடிந்து விட்டது.

சென்னை இன்றைக்கு சகஜ நிலைக்கு வந்து விட்டது. இதற்கு காரணம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்த முன்எச்சரிக்கை நடவடிக்கை தான். ஆயினும் இந்த மாதிரி மழை எதிர்பாராத மழை. ஒவ்வொரு 8 ஆண்டு, 10 ஆண்டுக்கு ஒரு முறை பெருமழை பெய்து வருகிறது. இதற்கு கண்டிப்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை செய்து நல்ல முடிவு எடுப்பார் என்று தயாநிதி மாறன் கூறினார்.

## அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில் இசைத் திருவிழா

அரியலூர்,டிச.10–

அரியலூர் அருகே லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையத்தில் இசைத் திருவிழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், லிங்கத்தடிமேடு, வள்ளலார் கல்வி நிலையம், அரசு உதவி பெறும் கே.ஆர்.வி நடுநிலைப் பள்ளியில் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு



இசை ஆசிரியர் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர் பெ.சௌந்தரராஜன் பரிசு வழங்கி பாராட்டு தெரிவித்தார். நிகழ்ச்சியில் மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தென்காசியில் காங்கிரஸ் சார்பில் சோனியா காந்தியின் 77வது பிறந்தநாள் விழா

தென்காசி,டிச.10–

தென்காசி காந்தி சிலை முன்பு காங்கிரஸ் கட்சியின் சார்பில் அன்னை சோனியா காந்தியின் 77வது பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவரும், தென்காசி சட்டமன்ற உறுப்பினருமானஎஸ்பழனிநாடார் தலைமை வகித்து 77 நபர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தென்காசி நகரத் தலைவர் மாடசாமி ஜோதிடர், மாநில பொதுக்குழு உறுப்பினர் சட்டநாதன், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதயகிருஷ்ணன்,மாவட்டபொதுச்



செயலாளர் ஏஜிஎம்.கணேசன், கவுன்சிலர்கள் சுப்பிரமணியன், ரபீக், நகர பொருளாளர் ஈஸ்வரன், சந்தோஷ், தேவராஜன், சித்திக், நரி சேட், முஸ்தபா, கதிர்வேல், ராமச்சந்திரன், சுரண்டை தேவேந்திரன், சண்முகவேல், பிரபாகரன், அரவிந்த், இளைஞர் காங்கிரஸ் சுரேஷ் இளவரசன், பிரேம்குமார், துரை, கண்ணன், சுடலையாண்டி, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர், முடிவில் மாவட்ட பொதுச் செயலாளர் ஏஜிஎம். கணேசன் அனைவருக்கும்நன்றிகூறினார்.




மதுரை கலெக்டர் அலுவலகம் நுழைவாயில் அருகில் உள்ள தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் மையத்தில் உள்ள அமரர் ஆர். ஏ. கே அரங்கத்தில் வைர விழா ஆண்டு மாவட்ட மாநாடு, தொ. மோ. கோபி மாவட்டத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மாநிலத் தலைவர் எம். பி. முருகையன், இல. முத்துப்பாண்டியன் மாவட்டப் பொருளாளர் பேசிய போது எடுத்த படம். உடன் மாவட்ட புறநகர் துணைத்தலைவர் அ. சுரேஷ் பிரெடரிக் கிளமென்ட், மாவட்டச் செயலாளர் மு. முகைதீன் அப்துல் காதர், மாநில செயலாளர் எம். எஸ். அன்பழகன், மேனாள் மாவட்டத் தலைவர் டி. ஆர். சதாசிவம், மாவட்ட இணைச் செயலாளர் மு. மணிமேகலை, த. இலக்கியா, பா. செந்தில்குமரன், மத்திய செயற்குழு உறுப்பினர் ப. ராம்குமார் மற்றும் மதுரை மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்கள், மாவட்ட நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## வெள்ளத்தில் சேதமடைந்த வாகனங்களுக்கு காப்பீடு அமைச்சர் தங்கம் தென்னரசு முக்கிய அறிவிப்பு

சென்னை : டிச. 10, சென்னை வெள்ளத்தில் சேதமடைந்த வாகனங்களுக்கு காப்பீட்டுத் தொகையினை விரைவாக வழங்க தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

வெள்ளம் பாதித்த சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுமார் 4 லட்சம் வாகனங்கள் சேதமடைந்திருப்பதாக தோராயமாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. வெள்ளத்தால் கடந்த ஒரு வாரமாக வருமானம் இன்றி தவிக்கும் சாமானிய மக்களுக்கு பைக் உள்ளிட்ட வாகனங்கள் மேலும் செலவை இழுத்து விட்டிருக்கிறது. எனவே வாகன தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் இன்சூரன்ஸ் கம்பெனிகள் வாகனங்களை பழுதுநீக்கும் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கைகள் எழுந்திருக்கின்றன.

இந்நிலையில், காப்பீடு செய்யப்பட்ட சேதமடைந்த வாகனங்களுக்கு விரைவாக காப்பீட்டுத் தொகையை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அறிவுறுத்தலின்படி, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய காப்பீட்டு நிறுவனங்கள், மோட்டார் வாகன விற்பனையாளர் சங்கக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருடன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட 13 முக்கிய காப்பீட்டு நிறுவனங்கள், இதுவரை 600 இருசக்கர, 1,275 நான்கு சக்கர மற்றும் 445 வணிக வாகனங்கள் என மொத்தம் 2,320 மோட்டார் வாகனங்களுக்கு



காப்பீட்டுத் தொகைக்கான விண்ணப்பங்கள் வரப் பெற்றுள்ளன எனத் தெரிவித்தனர். இதனையும் இனிவரும் நாட்களில் பெறப்படும் காப்பீட்டு விண்ணப்பங்களையும் உடனடியாக தீர்வுசெய்வதற்கு அமைச்சர் தங்கம் தென்னரசு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும், புயலால் பாதிக்கப்பட்ட இத்தருணத்தில், அனைத்து காப்பீட்டு நிறுவனங்களும் மனிதாபிமான அடிப்படையில் பொதுமக்களுக்கு உதவும் விதமாக விரைந்து செயலாற்றவும் வலியுறுத்தினார். அனைத்து காப்பீட்டு நிறுவனங்களையும் குறுஞ்செய்தி, வாட்ஸ்ஆப் மற்றும் இதர சமூக ஊடகங்கள் மூலமாகவும், உதவி மையங்கள் / சிறப்பு முகாம்கள் அமைத்தும் எளிதான முறையில் வாகன காப்பீட்டுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைபெற்றுதீர்வு காண அறிவுறுத்தப்பட்டது. இப்பேரிடர் நிவாரண காலத்தில் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிட உதவிடும் வகையில் சேதமடைந்த வாகனங்களை நேரில் சென்று விரைந்து ஆய்வு செய்து காப்பீட்டு தொகையினை மக்களுக்கு துரிதமாக வழங்கிட அமைச்சர் வலியுறுத்தினார்.

மோட்டார் வாகன விற்பனையாளர் சங்கக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஏற்று, வாகனங்களை பழுது பார்ப்பதற்கு காலி இடங்களை கண்டறிந்து அரசு தரப்பிலிருந்து தற்காலிகமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், சேதமடைந்த வாகனங்களை பழுதுபார்ப்பு நிலையங்களுக்கு மொத்தமாக கொண்டு செல்வதற்கான இழுவை வாகனங்களை பிற மாவட்டங்களிலிருந்து கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் துறை சார்ந்த மற்ற அலுவலர்களும் பங்கேற்றனர். இக்கூட்டத்தின் முடிவில், அமைச்சரின் வழிகாட்டுதல்களை ஏற்று அரசுடன் இணைந்து மிக்ஜாம் புயலால் சேதமடைந்த காப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை விரைவாக பழுது பார்த்துத் தரவும், காப்பீட்டுத் தொகையினை விரைந்து வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சம்மந்தப்பட்ட அமைப்பினர் உறுதி அளித்தனர்.

# சீர்காழியில் சாலை ஓரம் கொட்டி கிடந்த குப்பையை தின்று 3 மாடுகள் உயிரிழப்பு



சீர்காழி,டிச,10

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி திருகோலக்கா தெருவை சேர்ந்த மல்லிகா என்பவருக்கு சொந்தமான மூன்று மாடுகள் காலையில் வழக்கம்போல் மேச்சலுக்கு சென்றுள்ளன. மேய்ச்சலுக்கு செல்லக்கூடிய இடங்கள் அனைத்தும் வீட்டுமனைகள் ஆக்கப்பட்டு வீடுகள் நிறைந்த பகுதிகளாக சென்றதால் மாடுகள் அனைத்தும் நகராட்சி சுற்றியுள்ள பகுதியில் உள்ள சாலைகளில் கிடக்கும் குப்பைகளை மேய்ந்து வருகின்றன.

இந்த நிலையில் சீர்காழி சன்னதி தெருவின் அருகே கொட்டப்பட்டு இருந்த குப்பைகளைமேய்ந்த மாடுகள் சிறிது நேரத்தில் அடுத்தடுத்து சரிந்து கீழே சாய்ந்தன. வாயில் நுரை தள்ளியும், கால்கள் வெட்டி வெட்டி இழுத்தும் துடி துடித்து சம்பவ இடத்திலேயே மூன்று மாடுகள் உயிரிழந்தன. இதனை அறிந்த அப்பகுதி மக்கள் அருகில் இருந்த கால்நடை மருத்துவருக்கு தகவல் தெரிவித்து வரவழைக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த மேலும் ஒரு மாட்டுக்கு சிகிச்சை அளித்து காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். மேலும் சாலையோரம் கிடந்த குப்பையைச் தின்று அடுத்தடுத்து மூன்று மாடுகள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.



இந்தியாவிலேயே முதன்முறையாக எம்பிபிஎஸ், பிடிஎஸ், சித்தா, ஹோமியோபதி போன்ற பதிவு செய்யப்பட்ட மருத்துவப் பயிற்சியாளர்களுக்காக இளம் டாக்டர்கள் ஒலிம்பிக் லீக், புனேயில் நடத்தப்பட்டது. சத்ரபதி சிவாஜி விளையாட்டு வளாகத்தில் உள்ள பாலேவாடி மைதானத்தில் நடைபெற்ற 1வது இந்திய மருத்துவர்களுக்கான ஒலிம்பிக் போட்டியில் சென்னையைச் சேர்ந்த பல் மருத்துவர் டாக்டர்.எஸ்.விஜயா பங்கேற்றார். இந்தியா முழுவதும் மொத்தம் 1400 மருத்துவர்கள் அனைத்து விளையாட்டுகளிலும் பங்கேற்றனர். இதில் சென்னையை சேர்ந்த டாக்டர் விஜயா 100 மீட்டர், 200 மீட்டர் & 4x100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் 6 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார் ,மேலும் ஓட்டப்பந்தயம் & நீளம் தாண்டுதலில் - 2 தங்கப் பதக்கங்கள் 35 -50 வயதுக்குட்பட்ட பிரிவில் குண்டு எறிதலில் தங்கம் பதக்கம் பெற்றார்.இவரின் இந்த அபார திறமையை உடன் கலந்து கொண்ட சக போட்டியாளர்கள் வாழ்த்துகள் பாராட்டை டாக்டர் விஜயாக்கு தெரிவித்தனர்.

# காட்டுமன்னார்கோயில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக சோனியா காந்தி பிறந்த நாள் விழா



காட்டுமன்னார்கோயில் டிச.10

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் கடைவீதியில் சாமி ஜெகஜானந்தா சிலை அருகில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி பிறந்தநாள் நிகழ்ச்சி காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் கட்சியின் சார்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில துணைத்தலைவர் கே.ஐ மணிரத்தினம் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

நிகழ்ச்சியில் இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் அரவிந்த் மணிரத்தினம்.மாநில பொதுக்குழு உறுப்பினர் மணிமொழி. ராமன் ஆசிரியர் மகிலா காங்கிரஸ் மாவட்டத் தலைவர் கரோலின் அண்ணாதுரை மாவட்ட செயலாளர் ஷானு ஜாகிர் உசேன் அண்ணாதுரை வட்டாரத் தலைவர் சுங்கர் நகரத் தலைவர் அன்வர் , பாண்டியன் இளைய அன்பழகன் .சலாம் திருநாவுக்கரசு ஜோதிபாசு தெம்மூர் செல்வம் அந்தோணி ராமதாஸ். ராஜன் ரங்கநாதன் ஆசிரியர் தினேஷ் குணசேகரன் திருவருச மூர்த்தி அம்பேத். கிருபாகரன் ஜெயசீலன் மற்றும் நிர்வாகிகள் பலர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# ஒகேனக்கல் மலைப் பாதையில் சுற்றுலா பேருந்து கவிழ்ந்து விபத்து : 35 பேர் காயம்



தருமபுரி, டிச. 10-

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் மலைப்பாதையில் சுற்றுலா பேருந்து கவிழ்ந்த விபத்தில் 35-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

விழுப்புரம் மாவட்ட சுகாதார துறையில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் குடும்பத்தினர் சுற்றுலா பேருந்து ஒன்றில் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு சுற்றுலா வந்தனர்.

நேற்று காலை ஒகேனக்கல் மலைப்பாதையில் ஆஞ்சநேயர் கோயில் பகுதியில் சென்றபோது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், பேருந்தில் பயணம் செய்த 35-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தகவல் அறிந்த காவல் மற்றும் தீயணைப்பு துறையினர் விபத்தில் காயம் அடைந்தவர்களை மீட்டு பென்னாகரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பினர்.

அங்கு முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர், பலத்த காயம் அடைந்த 10க்கும் மேற்பட்டோர் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். மலைச்சாலையின் இடது ஓர சரிவில் பெரும் பள்ளம் உள்ளது. நல்வாய்ப்பாக பேருந்து மலைச்சாலையின் பக்கவாட்டில் மோதி சாலையில் கவிழ்ந்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து ஒகேனக்கல் போலீஸார் விசாரிக்கின்றனர்.

# கர்நாடகா, மகாராஷ்டிராவில் 44 இடங்களில் என்ஐஏ சோதனை : 13 பேர் கைது



புதுடெல்லி : டிச. 10,

கர்நாடகா, மகாராஷ்டிராவில் தேசிய புலனாய்வு அமைப்பினர் நேற்று அதிகாலையிலேயே அதிரடி சோதனை மேற்கொண்டனர். 44 இடங்களில் நடந்த இந்தச் சோதனையில் 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

கர்நாடகாவில் சில இடங்களிலும், மகாராஷ்டிராவில் தானே நகரம், தானே கிராமப்புறம், மீரா பயாண்டர் ஆகிய பகுதிகளில் இச்சோதனை நடைபெற்றுள்ளது. ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதானவர்கள் ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாதக் குழுவின் கோட்பாடுகளை இந்தியாவில் பரப்ப முயற்சித்துள்ளனர் என்று என்ஐஏ குற்றஞ்சாட்டுகிறது. மேலும் அவர்கள் ஐஇடி வெடிப்பொருட்களை தயாரிப்பதிலும் ஈடுபட்டதாகத் தெரிகிறது. தேசத்தில் பயங்கரவாத சதிச் செயல்களில் ஈடுபடவிருந்ததால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை ராயபுரம், ஆர் கே.நகர், திருவொற்றியூர் உள்ளிட்ட தொகுதிக்குட்பட்ட பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி,அரிசி பால்,பிரட்,சேலை உட்பட நிவாரண உதவிகள் வழங்கினார்.உடன் முன்னாள் அமைச்சர்கள் மூர்த்தி, வளர்மதி,குப்பன்,கவுன்சிலர் கார்த்திக் உட்பட ஏராளமான அ தி மு க வினர் கலந்து கொண்டனர்..



சென்னை ஆர்கே நகர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்னை ஆர்கே நகர் காவல் நிலையம் சார்பில் 150 குடும்பங்களுக்கு அரிசி, பாய், போர்வை, பால், பால்பவுடர், ரவை பேஸ்ட் பிரஷ் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை வண்ணாரப்பேட்டை துனை ஆணையர் சக்திவேல், மற்றும் வண்ணாரப்பேட்டை மதுவிலக்கு பிரிவு உதவி ஆணையர் இளங்கோவன் பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கினர்.



மிக்ஜாம் புயல் ஏற்படுத்திய, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2000 நபர்களுக்கு நிவாரண உதவிகளை, சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், அ தி மு க பொதுச்செலாளருமான எடப்பாடி கே.பழனிசாமி , சென்னை துறைமுகம் தொகுதி இராஜாஜி சாலையில், கட்சி அமைப்பு செயலாளர் இராயபுரம் ஆர்.மனோ ஏற்பாட்டில் வழங்கினார். முன்னாள் அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், ப.வளர்மதி, முன்னாள் ராஜ்யசபா உறுப்பினர் நா.பாலகங்கா ஆகியோர் உடனிருந்தனர்.



புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழு மாதம் இரண்டு சனிக்கிழமைகளில் காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகை புரிந்து காரைக்கால் வாழ் பொதுமக்களுக்கு சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வரும் நிலையில் நேற்று காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் மூட்டு வலி சம்பந்தமான பிரச்சனைகள் குறித்து சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



செங்கல்பட்டு மாவட்டத்தில் அகில இந்திய முன்னாள் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த அன்னை சோனியா காந்தியின் பிறந்தநாள் நிகழ்ச்சியை நந்திவரம் கூடுவாஞ்சேரி காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக ஜி.எஸ். டி.ரோட்டில் அமைந்துள்ள நீதி விநாயகர் ஆலயத்தில் சிறப்பு அபிஷேகமும், அன்னதானமும் சிறப்பாக நடைபெற்றது. மேலும் வருகின்ற 2024 ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சிவெற்றி பெற்றுஆட்சி அமைத்து, தலைவர் ராகுல் காந்தி பிரதமராக அமர நாங்கள் இறைவனை வேண்டிக் கொள்கின்றோம். மேலும் அதை மக்களிடம் நாங்கள் எடுத்து செல்வோம். கூடுவாஞ்சேரி நந்திவரம் நகரக் கழக தலைவர் கிருஷ்ணன் மற்றும் கூடுவாஞ்சேரி நகர காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள் அப்துல் காதர், ராஜராஜன், பொன்னு காளை, இளையராஜா மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் தனலட்சுமி, காயத்ரி , காங்கிரஸ் கட்சி தலைவர்களும், ஏராளமான பொதுமக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சோனியா காந்தி பிறந்தநாள் விழாவினை சிறப்பித்தனர்.

# சென்னை மக்களுக்கு 50 டன் அரிசி திமுக மாவட்ட பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் வழங்கினார்



காட்டுமன்னார்கோயில், டிச.10

சென்னையில் மழை, புயலால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு தமிழ்நாடு முதலமைச்சர்,கட்சித் தலைவர் அறிவுறுத்தலின் படியும், தமிழ்நாடு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழிகாட்டுதலுடன் ,சென்னையில் வரலாறு காணாத தொடர் மழை மற்றும் மிக்ஜாம்புயலால்பாதிக்கப்பட்ட சென்னை ,சேப்பாக்கம் தொகுதி பொதுமக்களுக்கு வழங்க 50 ஆயிரம் கிலோ (50டன்)அரிசி பைகள் மற்றும் 20,000 குடிநீர் பாட்டில்களை அடங்கிய நிவாரண பொருட்களை தமிழ்நாடு இளைஞர் நலன்,விளையாட்டு மேம்பாட்டு மற்றும் சிறப்பு திட்ட செயலாக்க துறை அமைச்சர், கட்சிஇளைஞரணிசெயலாளர் உதயநிதி ஸ்டாலின்டம் ,கடலூர் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளரும், எம்.ஆர்.கே கல்வி குழுமத்தின் தலைவர் எம்.ஆர் கே.பி.கதிரவன் வழங்கினார்.சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க செயலாளரும், சென்னை பெருநகர மாநகராட்சியின் பணிகள் நிலைக்குழு தலைவர் சிற்றரசு மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# ஜாம்ஷெட்பூரில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னையின் எப்.சி–ஜாம்ஷெட்பூர் அணிகள் ஆட்டம் டிராவில் முடிந்தது



ஜாம்ஷெட்பூர்,டிச,10

12 அணிகள் பங்கேற்றுள்ள 10-வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் ஜாம்ஷெட்பூரில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னையின் எப்.சி-ஜாம்ஷெட்பூர் அணிகள் மோதின.

இந்த போட்டியில் சென்னையின் எப்.சி அணி சார்பில் பருக் சவுத்ரி ஆட்டத்தின்9-வதுநிமிடத்திலும் மீடெய் ஆட்டத்தின் 40-வது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர். ஜாம்ஷெட்பூர் அணி சார்பில் லால்டின்புயா ஆட்டத்தின் 45+4-வது நிமிடத்திலும் டேனியல் ஆட்டத்தின் 90-வது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர்.

இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்கள் அடித்திருந்தன. இதையடுத்து சென்னையின் எப்.சி-ஜாம்ஷெட்பூர் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 2-2 கோல் கணக்கில் டிராவில் முடிந்தது

# காரைக்கால் மாவட்ட கல்வித்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து மண்டல அளவிலான அறிவியல் கண்காட்சி திருவிழா நடைபெற்றது



காரைக்கால் , டிச. 10-

புதுவை அரசு காரைக்கால் மாவட்ட கல்வித்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து கோவில்பத்து அரசு உயர்நிலைப் பள்ளியில் மண்டல அளவிலான அறிவியல் கண்காட்சி திருவிழா மூன்று நாட்கள் நடைபெற்ற நிலையில் மூன்றாம் நாளான நேற்று கண்காட்சியின் நிறைவு விழாவாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் நிரவி-திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் மேல்நிலைக் கல்வித் துணை இயக்குனர் ராஜேஸ்வரி முதன்மை கல்வி அதிகாரி விஜய மோகனா பள்ளி தலைமை ஆசிரியர் குமார் வட்டம் 1 மற்றும் வட்டம் 2 மேலும் அனைத்து பள்ளிகளை சேர்ந்த ஆசிரிய பெருமக்கள் பெற்றோர்கள் மாணவ மாணவிகள் இந்நிகழ்வில் திரளாக கலந்து கொண்டனர்.

அறிவியல் படைப்புகளில் சிறப்பாக படைத்த மாணவர்களுக்கு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் இந்நிகழ்வில் பரிசு பெற்ற அனைத்து மாணவர்களும் புதுவையில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள உள்ளார்கள். மூன்று நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்வினை அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகள் கண்டுக்களித்து அறிவியல் சம்மந்தமான படைப்புகளை பார்த்து பயன் பெற்றார்கள். மேலும் அறிவியல் சம்பந்தமான அறிவை மேம்படுத்திக் கொள்ள மாணவர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

மொத்தம் 170 பள்ளிகளில் இருந்து 256 படைப்புகள் அறிவியல் கண்காட்சியில் மாணவர்களால படைக்கப்பட்டிருந்தன். 104 அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இருந்து ஒன்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இந்த அறிவியல் கண்காட்சியினை கண்டுகளித்தார்கள். . மூன்று நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்வினை காளிதாஸ் சிறப்பாக செய்திருந்தார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் பரிசுகள் வழங்கினார்.

# சென்னையில் 679 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கி வைத்தார் அமைச்சர் மா.சுப்பிரமணியன்




சென்னை : டிச. 10,

சென்னையில் 679 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

சென்னையில் 679 இடங்களில் மழைக்கால மருத்துவ முகாம்கள் நடைபெற்றது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே மக்கள் நல்வாழ்வுத்துறையும், உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் கடந்த அக்டோபர் 23ம் தேதி தொடங்கி தற்போது வரை வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும் முகாம் 1000 என்று அறிவிக்கப்பட்டு 2000-த்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதும் 3,000 இடங்களில் மருத்துவ முகாம்கள் நேற்று நடைபெற்றது. புயல் பாதித்த சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் அதிகளவில் முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளில் முகாம்கள் தொடர்ந்து நடைபெறும் என மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இதுவரை நடைபெற்ற 6 வார முகாம்களில் 13,374 மருத்துவ முகாம்கள் நடந்துள்ளன. 6 லட்சத்துக்கும் மேற்பட்டோர் மருத்துவ முகாம்கள் மூலம் பயனடைந்துள்ளனர்

இது குறித்து செய்தியாளர்களை சந்தித்து அமைச்சர் பேசியதாவது; மழை வெள்ளம் பாதித்த பகுதிகளில் தொடர்ச்சியாக மருத்துவமுகாம் நடத்தப்படும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களை சந்தித்தோம். மக்கள் முகத்தில் கோபம் தெரியவில்லை எனவும் கூறினார். எதிர்க்கட்சிகள் மக்களை தூண்டிவிட்டு வீடியோவாக வெளியிடுகிறார்கள். இயல்பை விடவும் அதிகமான மழை பெய்து இருப்பதாக வானிலை மையமே அறிவித்துள்ளது. சென்னை வடிகால் பணிகளுக்காக ரூ.4000 கோடி செலவு செய்தது எப்படி எனவும் விவாதிக்க தயார் எனவும் தெரிவித்தார். எதிர்க்கட்சிகள் மழை, புயல் விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம் எனவும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

## நிவாரண உதவி...

முதல் பக்க தொடர்ச்சி

பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,410/-லிருந்து, ரூ.8,500/- ஆக உயர்த்தி வழங்கிடவும்; எருது, பசு உள்ளிட்ட கால்நடைகளின் உயிரிழப்பு நிவாரணமாக ரூ.30,000/- என்றிருந்ததை, ரூ.37,500/-ஆக உயர்த்தி வழங்கிடவும்; வெள்ளாடு, செம்மறி ஆடு உயிரிழப்பு நிவாரணமாக ரூ.3,000/- என்றிருந்ததை, ரூ.4,000/- உயர்த்தி வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளுக்கு நிவாரண உதவிகளைப் பொறுத்தவரையில், முழுமையாக சேதமடைந்த கட்டுமரங்களுக்கு (மீன்பிடி வலைகள் உட்பட), ரூ.32,000/- லிருந்து, ரூ.50 ஆயிரமாகவும், பகுதியாக சேதமடைந்த கட்டுமரங்களுக்கு ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து, ரூபாய் 15 ஆயிரமாகவும், முழுவதும் சேதமடைந்த வல்லம் வகை படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூபாய் 75 ஆயிரத்திலிருந்து, ரூபாய் ஒரு லட்சமாகவும், முழுவதும் சேதமடைந்த இயந்திரப் படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூபாய் 5 லட்சத்திலிருந்து, ரூபாய் 7.50 லட்சமாகவும் உயர்த்தி வழங்கிடவும், சேதமடைந்த வலைகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து, ரூபாய் 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகள் விவரம்: தமிழகத்தில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் வீசிய மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களின் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு, கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. முன்னதாக, மிக்ஜாம் புயலின் தாக்கம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தது. முதல்வர் தலைமையில் இதுகுறித்து கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டிருந்தன.

மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னதாகவே திட்டமிடப்பட்டு, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை மற்றும் தீயணைப்பு





மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய துறைகளைச் சார்ந்த மீட்புப் பணியினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். மீட்புப் பணிகளுக்குத் தேவையான டீசல் மோட்டார் பம்பு செட்டுகளும், படகுகளும், ஜே.சி.பி. இயந்திரங்களும், மரம் அறுக்கும் கருவிகளும் சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. இவை புயல் மழையின் தாக்கத்திற்குப் பிறகு உடனடியாக களத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன. மேலும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்காக 20 அமைச்சர் பெருமக்களும், 50-க்கும் மேற்பட்ட இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல் பணி அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

இது மட்டுமின்றி, 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின் வாரியப் பணியாளர்களும், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர்களும், ஆயிரக்கணக்கான தூய்மைப் பணியாளர்களும் இந்த மாபெரும் பணியில் இரவு, பகல் பாராமல் ஈடுபட்டனர். மழையினால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில், மக்களை மீட்க சுமார் 740 படகுகள் பயன்படுத்தப்பட்டன. இதன்மூலம், 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளப் பகுதிகளிலிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உணவு வழங்கும் பணிக்கென தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, பெரிய அளவில் சமையல் அறைகள் நிறுவப்பட்டு, தரமான உணவு சமைக்கப்பட்டு, சென்னை மாவட்டத்தில் மட்டும் 8-12-2023 வரை, மூன்று வேளை உணவாக, மொத்தம் 47 லட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் இதுவரை 51 லட்சத்திற்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், பால் ஆகிய பொருட்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் பெறப்பட்டு, முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் மழைநீர் தற்போது வடிந்துள்ள நிலையில், அந்தப் பகுதிகளில் தற்போது 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களை ஈடுபடுத்தி, பேரிடர் மீட்புக் குழுவினரின் உதவியுடன் போர்க்கால அடிப்படையில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மருத்துவ முகாம்களும் தேவையான இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு பல்வேறு மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அறந்தாங்கி அருகே கோவில் பூசாரி

# கல்லணை கால்வாய் கிளை வாய்க்காலில் சடலமாக மீட்பு

அறந்தாங்கி டிச.10-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே அரசர்குளம் கீழ்பாதி மடத்துக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் சன்னாசி இவர் காளிகோயில் பூசாரியாக இருந்து வந்தார்.

சம்பவத்தன்று மாலை முதல் அவர் வீடு திரும்பாததால் அவரது மனைவி பல்வேறு பகுதிகளில் தேடி வந்தார். இந்நிலையில் கல்லணை கால்வாய் கிளை வாய்க்காலில் ஆண் சடலம் மிதப்பதாக நாகுடி போலீசாருக்கு தகவல் கிடைத்தது.



தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த நாகுடி போலீசார் தண்ணீரில் சடலமாக கிடப்பது காளி கோயில் பூசாரி சன்னாசி என உறுதிசெய்தனர். உடனடியாக உடலைக் கைப்பற்றிய போலீசார் அறந்தாங்கி அரசு தலைமை மருத்துவமனைக்கு பிரதேச பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

காளி கோவில் பூசாரி அடித்து கொலை செய்யப்பட்டாரா அல்லது வேறு ஏதும் காரணமாக உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் நாகுடி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

### முதலமைச்சர் நிவாரண நிதிக்கு விசிக ரூ.10 லட்சம்

# தமிழ்நாடு அரசின் நிவாரணப் பணி சிறப்பாக உள்ளதாக திருமாவளவன் பாராட்டு

சென்னை, டிச. 10-

புயல் மழை மீட்பு மற்றும் நிவாரணப் பணிக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் ரூ.10 லட்சம் வழங்கினார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது; விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் தங்களின் ஒரு மாத ஊதியத்தையும் வழங்கியுள்ளனர். வெள்ள நிவாரண நிதிக்கு தமிழ்நாடு அரசு ரூ.5,000 கோடி கேட்ட நிலையில் குறைந்த தொகையை மட்டுமே மத்திய அரசு வழங்கியுள்ளது என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு அரசின் நிவாரணப் பணி சிறப்பாக உள்ளது கடந்த கலங்களைவிட இந்த முறை முன்னெச்சரிக்கை நடவடிக்கை சிறப்பாக இருந்தது. புயல் பாதித்த பிறகு முதல்வர் உள்ளிட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் உடனே களத்தில் இறங்கி மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். தமிழ்நாடு அரசு தன் சக்திக்கு ஏற்ப மீட்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது; அதை தீவிரப்படுத்த வேண்டும். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் களத்துக்கு சென்று மக்களுக்கு உதவ வேண்டும் என்று முதல்வர் அறிவுறுத்தி உள்ளார். திமுக மட்டுமின்றி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் களத்தில் நின்று அவர்களால் முடிந்த உதவிகளைச் செய்து வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

### காப்பீடு நிறுவன நெட்வொர்க் அல்லாத மருத்துவமனையில்

# சிகிச்சை பெற்றாலும் காப்பீட்டு தொகை வழங்க மறுக்கக் கூடாது : ஐகோர்ட் கிளை கருத்து

மதுரை : டிச. 10, காப்பீடு நிறுவன நெட்வொர்க் அல்லாத மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாலும் காப்பீட்டு தொகை வழங்க மறுக்கக் கூடாது என்று உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சை செய்து கொண்டதற்கான காப்பீட்டு தொகை தரக்கோரி மணி என்பவர் ஐகோர்ட் மதுரை கிளை மனு தாக்கல் செய்திருந்தார். புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் நிர்வாக அதிகாரியாக இருந்து 2010-ல் ஓய்வு பெற்றேன். ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மருத்துவக் காப்பீடு செய்யப்பட்டு உள்ளது.



புற்றுநோயால் பாதிக்கப்பட்டு 2016-ல் 7 நாட்கள் வரை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மருத்துவ செலவுக்கான தொகையை வழங்கக் கோரிய விண்ணப்பத்தை காப்பீட்டு நிறுவனம் நிராகரித்தது. காப்பீடு நிறுவனம் தனக்கு காப்பீட்டு தொகையை வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மனுதாரர் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அதில் மனுதாரர் எடுத்த சிகிச்சையின் உண்மைத் தன்மை மறுக்கப்படவில்லை என்று ஐகோர்ட் மதுரை கிளை நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். சிகிச்சை உண்மையானது என கண்டறியப்பட்டவுடன் மனுதாரரின் கோரிக்கையை நிராகரிக்க எந்த காரணமும் இல்லை. ஓய்வூதியர் எடுத்துக் கொண்ட சிகிச்சைக்கு காப்பீடு வழங்க இயலாது என்ற உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. 6 வாரத்துக்குள் மனுதாரருக்கு காப்பீட்டு தொகையை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் வழங்க ஐகோர்ட் கிளை ஆணையிட்டுள்ளது.

# சோனியா காந்தி பிறந்தநாள் : முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை : டிச. 10, நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி பிறந்தநாளை ஒட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில், "அர்ப்பணிப்புமிக்க பொதுவாழ்க்கைக்கு அடையாளமாக விளங்கும் நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்திக்கு எனது பிறந்தநாள் நல்வாழ்த்துகள். அவர் நீண்டகாலம் நல்ல உடல்நலத்துடன் திகழ விழைகிறேன்.



சோனியா காந்தியின் ஆழ்ந்த தொலைநோக்கும் அனுபவச் செல்வமும் எதேச்சாதிகார சக்திகளிடம் இருந்து இந்தியாவைப் பாதுகாக்கும் நம் ஒன்றிணைந்த முயற்சிக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் தொடர்ந்து அமைந்திடட்டும்" என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

# தென்காசி கலைஞர் அறிவாலயத்தில் தெற்கு மாவட்ட திமுக சார்பில் ஆலோசனைக் கூட்டம்

தென்காசி, டிச .10-

தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் தென்காசி கலைஞர் அறிவாலயத்தில், தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன் தலைமையில் மாவட்ட மகளிரணி ,மகளிர் தொண்டரணி , பொறியாளர் அணி, வர்த்தகர் அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சேலம் 2-வது இளைஞரணி மாநாடு மற்றும் 2024 நாடாளுமன்ற தேர்தல் ஆயத்தபணிகள் குறித்து கருத்துகள் ஆலோசிக்கப்பட்டது .



இந்த கூட்டத்தில் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திவ்யா மணிகண்டன், மகளிர் அணி அமைப்பாளர் சங்கீதா சுதாகர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செல்வகுமார் , மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் முத்துக்குமார் , மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் அண்ணாமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வளன் அரசு,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜே.கே. ரமேஷ்,மாவட்ட பிரதிநிதி பொன்செல்வன், பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் ஜாஹிர் உசேன், தங்கபாண்டியன், மணிகண்டன், தயானந்த், ஆல்வின், சிவராஜன், மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்கள் ராஜேஸ்வரி, மாரி செல்வி பாண்டியராணி, தனலட்சுமி, ஷோபனா ராணி, விமலா ராணி, மகளிரணி துணை அமைப்பாளர்கள், தர்மசெல்வி, சரஸ்வதி பாஸ்கர், கற்பக செல்வி, மாரியம்மாள் சுந்தரி, பானு ஷமீம், வர்த்தகர் அணி துணை அழைப்பாளர்கள் பிலிப்ராஜா, சண்முகராஜ், செல்வம், ராமராஜ், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அழைப்பாளர்கள் திருமலைச்சாமி, குட்டி, அமனுல்லா, மாரியப்பன், சொக்கம்பட்டி மணிகண்டன், ஜீவானந்தம், துணைத் தலைவர் அந்தோணிசாமி, தகவல் தொழில் நுட்ப அணி சுதன் ராஜா, பவுல்ராஜ் பங்களா சுரண்டை உள்ளிட்ட அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சங்கரன்கோவிலில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி மாபெரும் கிரிக்கெட் போட்டி : எம்எல்ஏ ராஜா துவக்கி வைத்தார்

சங்கரன்கோவில். டிச.10-

திமுக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தயாநிதி மாறன் எம்பி ஆலோசனையின் படி , தென்காசி வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் இளைஞர்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் காசிராஜன் தலைமை வகித்தார், துணை அமைப்பாளர்கள் கார்த்தி, கேபிள் கணேசன், மகாராஜன், கிருஷ்ணா, சேவுகபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், நிகழ்ச்சியில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணை அமைப்பாளர் நம்பி ஆகியோர் கலந்து கொண்டு கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்தனர். இதில் மாவட்டத்தில் இருந்து 50 அணிகள் இந்த போட்டியில் பங்கேற்றனர் போட்டியில் முதலிடம் பிடிப்பவர்களுக்கு ரூ.20,046ம் இரண்டாம் பரிசாக ரூ 15046 ம் மூன்றாம் பரிசாக 70 46 ம் மற்றும் கோப்பைகள் உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்படுகின்றது.



இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் சரவணன், பொதுக்குழு உறுப்பினர் தேவா என்ற தேவதாஸ், ஒன்றிய செயலாளர்கள் பெரிய துரை, மதிமாரிமுத்து, சங்கரன்கோவில் நகரச் செயலாளர் பிரகாஷ் சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன், அரசு ஒப்பந்ததாரர் ஜலால், சங்கரன்கோவில் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வீமராஜ், பனவடலி மகேந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, ராஜ் ராஜராஜன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் தினேஷ் , தகவல் தொழில் நுட்ப அணி மு.குமார், இளைஞர் அணி யோகேஷ், அய்யனார் ,சிவா, சூரியகுமார், சசி, முத்துக்குமார், தருண், மணி, வீரா, தாஸ் , காவல் கிளி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூரில் திடீரென வெடித்த வாஷிங் மெஷின் வீட்டில் இருந்த பொருட்கள் எரிந்து சேதம்

தஞ்சாவூர் : டிச. 10, தஞ்சாவூரில் வீட்டில் இருந்த வாஷிங் மெஷின் திடீரென வெடித்து விபத்து ஏற்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தஞ்சாவூர் கீழவாசல் கவாஸ்காரத்தெருவை சேர்ந்தவர் சிவகுருநாதன் (55). இவர் கீழவாசல் கடைவீதியில் பாத்திரக்கடை நடத்தி வருகிறார். இவரது வீட்டின் கீழ் பகுதியில் மாமனார் சுந்தரம், மாமியார் கமலம் வசித்து வருகின்றனர். மாடி வீட்டில் சிவகுருநாதன் மனைவியுடன் வசித்து வருகிறார். இந்நிலையில் நேற்று காலை சிவகுருநாதன் மனைவி புவனேஸ்வரி வழக்கம்போல துணி துவைப்பதற்காக வாஷிங்மெஷினில் துணிகளைப் போட்டு இயக்கியுள்ளார். அப்போது வாஷிங் மெஷின் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்து எரிந்தது.



சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்த சிவகுருநாதன் தீ பற்றி எரிவதை கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தார். மேலும் அக்கம் பக்கத்தினரும் அங்கு திரண்டனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு படையினர் வாஷிங்மெஷின் மீது தண்ணீர் பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர். இருப்பினும் வாஷிங் மெஷின் முற்றிலும் எரிந்து சேதமானது. இதேபோல் சோபா, டி.வி, கட்டில், மெத்தை , துணிமணிகள் ஆகியவையும் எரிந்து நாசமாகின.

இவற்றின் மதிப்பு பல ஆயிரம் இருக்கும் என கூறப்படுகிறது. இந்த பயங்கர தீ விபத்தில் நல்வாய்ப்பாக உயிர்சேதம் ஏற்படவில்லை. இது குறித்து கிழக்கு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். மின் கசிவு காரணமாக வாஷிங் மெஷின் வெடித்திருக்கலாம் என போலீஸார் சந்தேகிக்கின்றனர். இந்த சம்பவம் தஞ்சையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மிக்ஜாம் புயல் நிவாரணம் : மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அசோக் லேலண்ட் நிறுவனம் ரூ.3 கோடி நிதி

சென்னை : டிச. 10, மிக்ஜாம் புயல் மழை நிவாரணப் பணிகளுக்காக அசோக் லேலண்ட் நிறுவனம் ரூ.3 கோடி நிதி வழங்கியுள்ளது.

சென்னையில் கடந்த 4ம் தேதி ஏற்பட்ட மிக்ஜாம் புயல் மழை மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தி சென்றுள்ளது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டதால் ஏறத்தாழ ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்தப் பேரிடர் பாதிப்பிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு தங்களின் பங்களிப்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தங்கள் ஒரு மாத ஊதியத்தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினர்.

இந்தச் சூழ்நிலையில், நல்லுள்ளம் கொண்ட பல்வேறு தொழில் நிறுவனங்களும், தன்னார்வ அமைப்புகளும், பொது மக்களும் இந்த மாபெரும் பணிக்கு தங்களது பங்களிப்பினையும் வழங்கிட விருப்பம் தெரிவித்து, அரசைத் தொடர்பு கொண்டு வருகிறார்கள். இந்நிலையில், மிக்ஜாம் புயல் மழை நிவாரணப் பணிகளுக்காக அசோக் லேலண்ட் நிறுவனம் ரூ.3 கோடி நிதி வழங்கியுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் ரூ.3 கோடிக்கான காசோலையை அசோக் லேலண்ட் நிறுவன மேலாண் இயக்குநர் வழங்கினார். மேலும், பி.எஸ்.ஜி. குழுமத்தின் லீப் கிரீன் எனர்ஜி நிறுவனம் சார்பில் ரூ.1 கோடி நிதியை முதலமைச்சரிடம் வழங்கப்பட்டது.

### தெலங்கானா : தற்காலிக சபாநாயகராக

# ஏஐஎம்ஐஎம் கட்சியின் அக்பருதீன் ஒவைசி நியமனம் பதவி ஏற்பை புறக்கணித்த பாஜக எம்எல்ஏக்கள்

ஹைதராபாத், டிச. 10-

தெலங்கானா சட்டப்பேரவையின் தற்காலிக சபாநாயகராக ஏஐஎம்ஐஎம் கட்சியைச் சேர்ந்த அக்பருதீன் ஒவைசி நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் முன்னிலையில் பதவி ஏற்பதை பாஜக எம்எல்ஏ டி.ராஜா சிங் புறக்கணித்துள்ளார்.

தெலங்கானா மாநிலத்தின் கோஷாமஹால் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவர் பாஜக எம்எல்ஏக்கள் யாரும் பதவி ஏற்கமாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார். தற்காலிக சபாநாயகர் நியமனத்துக்கு முன்பாக இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோ செய்தி ஒன்றில், "உயிருள்ள காலம் வரை நான் ஏஐஎம்ஐஎம் முன்பு பதவி ஏற்றுக்கொள்ளமாட்டேன். முழுநேர சபாநாயகர் நியமிக்கப்பட்ட பின்னர் நான் பதவி ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறியுள்ள ராஜா சிங், கடந்த காலங்களில் இந்துக்களுக்கு எதிராக கருத்துக்கள் கூறிய ஒரு நபர் (அக்பருதீன் ஒவைசி) எப்படி நான் பதவி ஏற்றுக்கொள்ள முடியும்" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.



மேலும் அவர் கூறுகையில், "புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி தனது முன்னவர் கேசிஆரைப் போல ஏஐஎம்ஐஎம் கட்சிக்குக்கு பயப்படுகிறார். அதனால் அக்பருதீன் ஒவைசியை தற்காலிக சபாநாயகராக நியமிக்க அனுமதித்துள்ளார். பேரவையில் உள்ள மூத்த உறுப்பினரையே தற்காலிக சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்படுவது மரபு. ஆனால் புதிய முதல்வர் சிறுபான்மையினரையும் ஏஐஎம்ஐஎம் கட்சியையும் சமாதானப்படுத்துவதற்காக அக்பருதீனை தற்காலிக சபாநாயகராக நியமித்துள்ளார்" என்று கூறியுள்ளார்.

ராஜா சிங் பதவி ஏற்பை புறக்கணிப்பது முதல்முறை இல்லை. கடந்த 2018ம் ஆண்டும் ஏஐஎம்ஐஎம் கட்சியில் இருந்து தற்காலிக சபாநாயகர் நியமிக்கப்பட்டதால் பதவி ஏற்பை புறக்கணித்துள்ளார். இதனிடையே இந்த விவகாரம் குறித்து தெலங்கானா மாநில பாஜக தலைவர் கிஷண் ரெட்டி கூறுகையில், "தெலங்கானா சட்டப்பேரவையின் தற்காலிக சபாநாயகராக அக்பருதீன் ஒவைசி நியமிக்கப்பட்டதற்கு பாஜக எதிராக உள்ளது. இது தற்காலிக சபாநாயகர்களாக மூத்த எம்எல்ஏக்கள் நியமிக்கப்படும் மரபுக்கு எதிரானது. இந்த தற்காலிக சபாநாயகரின் முன்பாக பதவி ஏற்பதை பாஜக எம்எல்ஏக்கள் புறக்கணிப்பார்கள். சட்டப்பேரவைக்கு சபாநாயகர் நியமிக்கப்பட்ட பின்னர் பாஜக எம்எல்ஏக்கள் பதவி ஏற்றுக்கொள்வார்கள். எங்களால் ஏஐஎம்ஐஎம் போன்ற கட்சிகளுடன் ஒரு போதும் கூட்டுவைத்துக்கொள்ள முடியாது. இதுகுறித்து நாங்கள் ஆளுநரிடம் தெரிவிப்போம்" என்றார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ரசிகர்கள் கொண்டாடும் விராட் கோலியின் மிகச் சிறந்த ஒருநாள் சதம் எது தெரியுமா



**விளையாட்டு செய்தி : டிச. 10,**

**2012-ம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் உள்ள ஹோபார்ட்டில் இலங்கை அணிக்கு எதிராக விராட் கோலி எடுத்த 133 ரன்கள் இன்னிங்ஸ்தான் விராட் கோலியின் ஆகச் சிறந்த ஒருநாள் இன்னிங்ஸ் என்று ஈஎஸ்பிஎன் கிரிக் இன்போ வாசகர்கள் கருத்துக் கணிப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கோலி எடுத்த 50 ஒருநாள் சர்வதேச சதங்களில் ஹோபார்ட் சதமே ஆகச் சிறந்தது என்று ரசிகர்கள் தேர்வு செய்துள்ளனர்.**

மிர்பூரில் பாகிஸ்தானுக்கு எதிராக 183 ரன்களைக் கோலி எடுத்தார். இந்த இன்னிங்ஸுக்கும் ஹோபார்ட் இன்னிங்ஸுக்கும் கடும் போட்டி. ஆனால், கடைசியில் 64% வாக்குகளை வென்று கோலியின் ஹோபார்ட் சதமே சிறந்த சதமாகத் தேர்வு செய்யப்பட்டது. அன்று இலங்கை அணி நிர்ணயித்த இலக்கு 321 ரன்கள். ஆனால், கோலியின் மாஸ்டர் கிளாஸ் இன்னிங்சினால் 321 ரன்கள் இலக்கு, 36.4 ஓவர்களில் முடிந்து விட்டது. இலங்கைதான் பொதுவாக இப்படி சேசிங் செய்து பார்த்திருக்கிறோம். ஆனால், அன்று இலங்கையின் சேசிங் பாடத்தை அவர்களுக்கே நடத்திக் காட்டினார் விராட் கோலி.

அதுவும் மலிங்காவை ஒரே ஓவரில் 24 ரன்களை விளாசி, அவரது பந்து வீச்சைப் புரட்டி எடுத்தது கண்கொள்ளாக் காட்சியாகும். அதாவது, அன்று 40 ஓவர்களில் அந்த இலக்கை எட்டினால்தான் போனஸ் புள்ளிகள் கிடைக்கும் என்ற நிலை. இதன்மூலம் சிபி தொடர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற முடியும் என்ற நிலை இருந்தது. இந்த ஹோபார்ட் சதம் கோலியின் 9-வது சதமாகும். இதில் சேசிங்கில் 6-வது சதம். அப்போதே 2012-ல் ஈஎஸ்பிஎன் கிரிக் இன்போ இணையதளத்தின் சிறந்த ஒருநாள் இன்னிங்ஸாக இந்த இன்னிங்ஸ் தேர்வு செய்யப்பட்டது.

அந்த இன்னிங்ஸில் விராட் கோலி மொத்தம் 86 பந்துகளையே சந்தித்து 133 ரன்களை விளாசினார். அதில் 16 பவுண்டரிகள் 2 சிக்சர்கள் அடங்கும். சேவாக் 16 பந்துகளில் 5 பவுண்டரி ஒரு சிக்ஸருடன் 30 ரன்கள் விளாசியும், சச்சின் டெண்டுல்கர் 30 பந்துகளில் 39 ரன்கள் விளாசியும், கம்பீர் 64 பந்துகளில் 63 ரன்களை விளாசியும் ஆட்டமிழந்தனர். சுரேஷ் ரெய்னா 24 பந்துகளில் 3 பவுண்டரிகள் ஒரு சிக்சருடன் 24 நாட் அவுட். லசித் மலிங்காவின் மிக மோசமான தினமாக அன்று அமைந்தது. அவர் 7.4 ஓவர்களில் 96 ரன்கள் விளாசப்பட்டார். கைங்கரியம் விராட் கோலி.

மிர்பூரில் பாகிஸ்தானுக்கு எதிராக கோலி விளாசிய 183 ரன்கள் விளாசல் 2012-ம் ஆண்டு ஆசியக் கோப்பைப் போட்டியில் எடுக்கப்பட்டதாகும். இதில் பாகிஸ்தான் முதலில் பேட் செய்து ஹபீஸ் (105) நசீர் ஜாம்ஷெட் (112) ஆகியோரது சதங்கள் மூலம் 329/6 என்று பெரிய இலக்கை நிர்ணயித்தது. இந்திய அணி களமிறங்கிய போது கம்பீர் டக் அவுட் ஆனார். சச்சின் டெண்டுல்கர் 5 பவுண்டரி 1 சிக்சருடன் 48 பந்துகளில் 52 ரன்கள் விளாசி ஆட்டமிழந்தார்.

பிறகு கோலி, ரோஹித் சர்மா (68) ஜோடி சேர்ந்தனர். 172 ரன்களை இருவரும் விளாசித் தள்ளினர். விராட் கோலி 148 பந்துகளில் 22 பவுண்டரி 1 சிக்சருடன் 183 ரன்களை விளாசினார். 47.5 ஓவர்களில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. ஆனாலும், கோலியின் ஹோபார்ட் இன்னிங்ஸ்தான் பிட்ச், போட்டித் தொடரின் நெருக்கடித் தன்மை இறுதிக்குள் நுழைய தேவையான போனஸ் புள்ளிகள் என்று பலதரப்பட்ட நெருக்கடிகளுடன் ஆடப்பட்ட கிரேட் இன்னிங்ஸ் என்பதில் ஐயமில்லை, ரசிகர்கள் சரியான இன்னிங்ஸையே தேர்வு செய்துள்ளனர்.

# முகமது ஷமி சுயமாக கற்று கொண்டுள்ளார் பயிற்சியாளர் பராஸ் மாம்ப்ரே பாராட்டு




**மும்பை : டிச. 10,**

**இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் பராஸ் மாம்ப்ரே அளித்துள்ள பேட்டி:**

"முகமது ஷமி போன்ற ஒரு பவுலரை, ஒரு பயிற்சியாளரால் உருவாக்க முடியும் என்று நான் சொன்னால், நான் சொல்வது பொய். பந்தின் சீம் பகுதியை பிடித்து எந்த அசைவும் இல்லாமல் அதனை பிட்ச் செய்ய முகமது ஷமியால் மட்டுமே சர்வதேச கிரிக்கெட்டில் முடியும். இந்த திறமையை முகமது ஷமி சுயமாக கற்று கொண்டுள்ளார். அதற்காக அவர் ஏராளமான உழைப்பை கொடுத்துள்ளார்.

பும்ராவும் தனது அரிய பந்துவீச்சு ஆக்சன் திறமையால் பந்தை உள்ளே வெளியே என்று நகரத்த செய்கிறார். இது ஒரு கலை. இந்த கலையை கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு கச்சிதமானதாக மாற்றுகிறது. எங்களிடம் ஆரம்பத்தில் பும்ரா, சமி, இஷாந்த் சர்மா மூன்று பேர் இருந்தார்கள். இந்த வகையான மேஜிக்கை உருவாக்கியவர்கள் இவர்கள்தான். உண்மையில் இவர்கள் இந்த அளவிற்கு ஆதிக்கம் செலுத்துவார்கள் என்று நான் எதிர்பார்க்கவோ கனவில் நினைக்கவும் கூட இல்லை, என்றார்.

# சூர்யகுமார் யாதவை டி20 உலகக்கோப்பை கேப்டனாக்க வேண்டும்

## ஹர்பஜன் சிங் யோசனை



**மும்பை : டிச. 10,**

**2024 டி20 உலகக்கோப்பை தொடருக்கு இந்திய அணி தயாராகி வரும் நிலையில் முன்னாள் வீரர் ஹர்பஜன் சிங் அதிரடி யோசனை ஒன்றை கூறி இருக்கிறார்.**

மூத்த வீரர்கள் ரோகித் சர்மா, விராட் கோலி கடந்த ஓராண்டாக சர்வதேச டி20 போட்டிகளில் ஆடாத நிலையில், அவர்கள் இல்லாத நிலையில் அணியை வெற்றிகரமாக வழிநடத்திய சூர்யகுமார் யாதவ் தலைமையில் இந்திய அணியை உலகக்கோப்பைக்கு அனுப்பலாம் என யோசனை கூறி இருக்கிறார் ஹர்பஜன் சிங்.

மேலும், ரோகித் சர்மா, விராட் கோலியிடம் அவர்களின் டி20 எதிர்காலம் குறித்து என்ன நினைக்கிறார்கள் என பிசிசிஐ அமர்ந்து பேச வேண்டும் எனவும் அவர் கூறி உள்ளார். அதாவது சுற்றி வளைத்து அவர்கள் டி20 உலகக்கோப்பைக்கு வேண்டாம் என்பதை அவர்களிடம் பிசிசிஐ தெரிவிக்க வேண்டும் என்பதை நாசூக்காக கூறி இருக்கிறார்.

சமீபத்தில் நடந்து முடிந்த இந்தியா - ஆஸ்திரேலியா டி20 தொடரில் இந்திய அணி சூர்யகுமார் யாதவ் தலைமையில் களமிறங்கி அபாரமாக ஆடி 4 - 1 என தொடரைக் கைப்பற்றியது. ஆஸ்திரேலிய அணியில் முன்னணி வீரர்களான கிளென் மேக்ஸ்வெல், ட்ராவிஸ் ஹெட், ஸ்டீவ் ஸ்மித் போன்ற வீரர்கள் சில போட்டிகளில் ஆடிய போதும் இளம் வீரர்கள் மட்டுமே கொண்ட இந்திய அணி ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது. இளம் வீரர்களே சிறப்பாக ஆடும் போது அதே அணியை 2024 டி20 உலகக்கோப்பை தொடருக்கு அனுப்பலாம் என்பதே ஹர்பஜன் சிங்கின் கருத்தாக உள்ளது.

அதே சமயம், ரோஹித் சர்மா, விராட் கோலி ஆகியோர் பெரிய வீரர்கள் என்பதால் அவர்களை நீக்குவதும் எளிதல்ல என்பதையும் குறிப்பிட்டுள்ளார். இது பற்றி ஹர்பஜன் சிங் பேசுகையில், "கடந்த சில போட்டிகளில் சூர்யகுமார் தலைமையில் இந்திய அணி சிறப்பாக ஆடியது. இப்போது நம் எதிர்காலம் பற்றி யோசிக்க வேண்டும் என நினைக்கிறேன். விராட் கோலி, ரோஹித் சர்மா இரண்டும் பெரிய பெயர்கள். அவர்களுடன் நிச்சயம் இது குறித்து ஆலோசிக்க வேண்டும். நாம் இப்போதே இளம் வீரர்களை ஆதரித்தால் அவர்கள் உலகக்கோப்பை வருவதற்குள் தயாராகி விடுவார்கள். அதே சமயம், விராட் கோலி, ரோஹித் சர்மா தங்கள் டி20 எதிர்காலம் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி அவர்களிடம் பிசிசிஐ பேச வேண்டும்." என கூறினார்.

# அடுத்தடுத்து உயிரிழந்த முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் : ரசிகர்கள் அதிர்ச்சி





**மேற்கு இந்திய தீவு : டிச. 10,**

**மேற்கு இந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரர்களான கிளைட் பட்ஸ் மற்றும் ஜோ சாலமன் ஆகியோர் உயிரிழந்தனர்.**

மேற்கு இந்திய தீவுகள் மற்றும் கயனா அணிக்காக கிரிக்கெட் விளையாடியவர்கள் கிளைட் பட்ஸ் மற்றும் ஜோ சாலமன். இதில் பட்ஸ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடந்த கார் விபத்து ஒன்றில் சிக்கி உயிரிழந்தார். அவருக்கு வயது 66. சுழற்பந்து வீச்சாளரான இவர், வேகப்பந்து வீச்சாளர்கள் புகழ்பெற்று இருந்த காலத்தில் 4 ஆண்டுகள் மேற்கு இந்திய தீவுகள் அணிக்காக விளையாடியவர், 7 சர்வதேச டெஸ்ட் மற்றும் 87 ஃபர்ஸ்ட் கிளாஸ் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ளார். இதேபோல், கடந்த 2000-வது ஆண்டு மேற்கு இந்திய தீவுகள் அணியின் தலைமை தேர்வு குழு தலைவராகவும் இருந்தார்.

இந்த சோகம் அடங்குவதற்குள்ளாக அந்த அணியின் முன்னாள் வீரரான ஜோ சாலமன் உடல் நலக்குறைவு காரணமாக உயிரிழந்தார். அவருக்கு வயது 93. 1958 மற்றும் 1965 ஆண்டுகளுக்கு இடையே அவர் மேற்கு இந்திய தீவுக்காக விளையாடினார். மொத்தம் 27 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அவர், 1,326 ரன் குவித்துள்ளார். அதிலும், ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்ற அந்த எதிரான டெஸ்ட் போட்டியை டிரா செய்தது மிகப்பெரிய சாதனையாக கருதப்படுகிறது. இவரது இறப்பு குறித்து இரங்கலை பதிவு செய்துள்ள மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் வாரியம் உயிரிழந்த இருவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் தங்கள் இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளது.

# உலகக் கோப்பை போட்டிகள் நடந்த பெரும்பாலான பிட்ச்கள் 'ஆவரேஜ்' – ஐசிசி மதிப்பீடு



**விளையாட்டு செய்தி : டிச. 10,**

**சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) நடந்து முடிந்த உலகக் கோப்பையில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையே அகமதாபாத்தில் நடந்த இறுதிப் போட்டி மற்றும் ஆஸ்திரேலியா - தென்னாப்பிரிக்கா இடையே கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டனில் நடந்த அரையிறுதிப் போட்டி ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்பட்ட பிட்ச்கள் 'சராசரி' பிட்ச் என்று தன் மதிப்பீட்டை வழங்கியுள்ளது.**

ஐசிசி மேட்ச் ரெஃப்ரி ஆண்டி பைக்ராஃப்ட், நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டிக்கான பிட்சை மதிப்பீடு செய்ய கொல்கத்தாவில் நடந்த அரையிறுதிப் போட்டியின் ஆடுகளத்தை முன்னாள் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜவகல் ஸ்ரீநாத் மதிப்பிட்டார்.

இறுதிப் போட்டி என்று மரியாதையின்றி, புதிய பிட்சை போடாமால், ஏற்கெனவே இந்தியா-பாகிஸ்தான் நடந்த அதே பிட்சில் இறுதிப் போட்டியை நடத்தி இந்தியா தன் குழியைத் தானே தோண்டிக்கொண்டது. மந்தமான அகமதாபாத் விக்கெட்டில் முதலில் பந்துவீசத் தேர்ந்தெடுத்த ஆஸ்திரேலியா இந்தியாவை 50 ஓவர்களில் 240 ரன்களுக்குக் கட்டுப்படுத்தியது. இந்த பிட்சில் இந்த இலக்கு போதாது, அதுவும் விளக்கு வெளிச்சத்தில் பந்துகள் மட்டைக்கு நன்றாக வரத்தொடங்கியதையடுத்து டிராவிஸ் ஹெட் 120 பந்துகளில் 137 ரன்களை விளாச பாட் கம்மின்ஸ் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி 43 ஓவர்களில் இலக்கை வெற்றிகரமாகத் துரத்தியது.

அக்டோபர் 14 அன்று இந்தியா மற்றும் பாகிஸ்தான் மோதலுக்குப் பயன்படுத்தப்பட்ட அதே பிட்ச் இறுதிப் போட்டியில் பயன்படுத்தப்பட்டது குறித்து ஆஸ்திரேலியர்கள் கவலை தெரிவித்ததாக பல தகவல்கள் கூறுகின்றன. ஆனால் போட்டிக்கு முந்தைய செய்தியாளர்கள் சந்திப்பில் ஆஸ்திரேலியா கேப்டன் கம்மின்ஸ் அதை ஒரு 'நல்ல பிட்ச் ' என்று குறிப்பிட்டாலும், முன்னாள் அணித்தலைவர் ரிக்கி பாண்டிங் கூறுகையில், இறுதிப் போட்டிக்குத் தயாரிக்கப்பட்ட ஆடுகளம் இந்திய அணிக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது என்றார்.

ஈடன் கார்டன்ஸ், கொல்கத்தாவில் நடந்த ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்கா இடையேயான இரண்டாவது அரையிறுதி ஆட்டம் குறைந்த ஸ்கோர் போட்டியாக மாறியது. 49.4 ஓவரில் 212 ரன்களுக்கு தென் ஆப்பிரிக்காவை ஆல் அவுட் செய்த ஆஸ்திரேலியா பின்னர் 47.2 ஓவரில் 7 விக்கெட்டுகளை இழந்து சேஸிங்கை கஷ்டப்பட்டே முடிக்க முடித்தது. இந்தப் பிட்சும் சராசரி என்றே மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா ஆடிய 11 ஆட்டங்களில் 5 ஆட்டங்களுக்கான பிட்ச் 'ஆவரேஜ்' என்ற மதிப்பீட்டையே பெற்றுள்ளது. இறுதிப்போட்டி உட்பட இங்கிலாந்துடன் ஆடிய லக்னோ பிட்ச், பாகிஸ்தானுடன் ஆடிய அகமதாபாத் பிட்ச், தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக ஆடிய பிட்ச், சென்னையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஆடியப் பிட்ச் எல்லாமே ஆவரேஜ் பிட்ச் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் உண்மையில் படுமோசமான பிட்ச் ஆன மும்பை பிட்ச் 'நல்ல பிட்ச்' என்ற ரேட்டிங்கைப்பெற்றிருப்பது புரியாத புதிர். மொத்தத்தில் இந்த உலகக்கோப்பைக்குப் போடப்பட்ட பிட்ச்கள் எல்லாம் சராசரிக்கும் கீழ்தான், அதுவும் அவுட் ஃபீல்ட் படு மோசமாக அமைந்தது கண்கூடு. உலகின் பணக்கார கிரிக்கெட் வாரியம் பிட்ச்களைக் கூட பராமரிக்க முடியாத நிலையிலா உள்ளது?

வரலாறு சினிமா

# 'அதான் வாழ்க்கையோட சுவாரஸ்யமே' அமீரின் 'மாயவலை' டீசர் வெளியீடு



**சென்னை : டிச. 10,**

**அமீரின் 'மாயவலை' படத்தின் டீசர் வெளியிடப்பட்டு ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.**

இயக்குநர் அமீர் நடித்துள்ள திரைப்படம் 'மாயவலை'. ஆர்யாவின் தம்பி சத்யா, சஞ்சிதா ஷெட்டி, வின்சென்ட் அசோகன், தீனா, சரண் உட்பட பலர் நடித்துள்ளனர். ரமேஷ் கிருஷ்ணன் இயக்கியுள்ளார். யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். படத்தை அமீரின் ஃபிலிம் கார்ப்பரேஷன் நிறுவனம் தயாரித்துள்ளது. இயக்குநர் வெற்றிமாறன் தனது கிராஸ் ரூட் பிலிம் கம்பெனி சார்பில் வெளியிடுகிறார். இந்நிலையில், படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.

தொடக்கத்தில் 'நான் ராஜன்' என இன்ட்ரோ கொடுக்கிறார் அமீர். 'வடசென்னை' ராஜன் போல ரக்கடு பாயாக இருப்பார் என எதிர்பார்த்தால் அடுத்தடுத்த காட்சிகள் அதனை உடைக்கின்றன. 'நான் ராஜன், இது சாரா, இது சத்யா' என மூன்று பேரை அறிமுகப்படுத்துகிறார். 'மூன்று பேருக்குள்ளும் அன்பு இருக்கு, பாசம் இருக்கு, காதல் இருக்கு. எப்படி இதெல்லாம் ஒரே நாள்ல முடிவுக்கு வந்துச்சு' என அவர் ட்விஸ்ட் வைக்கும்போது, படம் மூன்று பேரைச் சுற்றி நடக்கிறது என்பதை உணர முடிகிறது.

அடுத்தடுத்து வரும் காட்சிகள் பிரச்சினைகளை மையப்படுத்து நகர்கிறது. எனினும் மொத்த டீசரிலும் யுவன் சங்கர் ராஜாவின் மெல்லிய பின்னணி இசையும், 'அடுத்த நிமிஷம் என்ன நடக்குப்போகுதுன்னு தெரியாமல கற்பனையிலயே வாழ்றோம் பாருங்க அதான் வாழ்க்கையோட சுவாரஸ்யமே', 'வாழ்க்க எப்போதுமே ஒரு மாயவலை தான்' என்ற வசனங்கள் ஹைலைட்ஸ். படத்தின் வெளியீட்டு தேதி அறிவிக்கப்படவில்லை.

# பிரதமர் மோடி போல நானும் சிங்கிள்தான் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த 'எஸ்.எம்.எஸ்' பட நடிகை





**புனே : டிச. 10,**

**பிரதமர் மோடி போல நான் இன்னும் சிங்கிள்தான் என நடிகை அனுயா வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். இதன் மூலம் இவர் தனது திருமணம் வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.**

'சிவா மனசுல சக்தி' படம் மூலமாகத் தமிழில் கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை அனுயா. அதன் பிறகு, 'நண்பன்', 'நகரம்', 'மதுரை சம்பவம்' உள்ளிட்டப் பல படங்களில் நடித்துள்ளார். புனேயைச் சேர்ந்த இவர் கடந்த ஒன்பது வருடங்களுக்கும் மேலாக படங்கள் எதுவும் நடிக்காமல் இருக்கிறார். இவரது அந்தரங்க புகைப்படங்கள் சமீபத்தில் இணையத்தில் வெளியாகி பரபரப்பை கிளப்பியது. இவருக்குத் திருமணம் ஆகி விட்டது எனவும், விஜய் ஆண்டனி, சுந்தர்.சி எனப் பலருடன் தொடர்பில் இருக்கிறார் எனவும் வலம் வந்த வதந்திகளுக்கு இவர் வீடியோ பதிவு ஒன்றில் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது, "நான் துபாயில் பிறந்து வளர்ந்தவள். எனக்கு தமிழ் கொஞ்சமாகதான் தெரியும். என்னுடைய அப்பாவும் அம்மாவும் மருத்துவராக இருந்து வருகிறார்கள். என்னுடைய அண்ணன் வெளிநாட்டில் இருக்கிறார். நான் புனேவில் பொறியியல் பட்டம் பெற்றேன். பிறகு சினிமாவில் நடிக்க வந்துவிட்டேன். நான் விஜய் ஆண்டனி, ஜீவா, சுந்தர்.சி, ஹரிகுமார் உள்ளிட்டோருடன் ரிலேஷன்ஷிப்பில் இருந்து வருகிறேன் என எழும் வதந்திகள் அனைத்தும் உண்மையல்ல. நான் பிரதமர் மோடி போல இன்னும் சிங்கிளாகத் தான் இருக்கிறேன். இன்னும் எனக்குத் திருமணம் ஆகாததற்குக் காரணம் என்னைச் சுற்றியுள்ள ஆண்கள் சரியில்லை" என பேசியுள்ளார்.

# லேடி சூப்பர் ஸ்டார் என்றாலே திட்டுகிறார்கள் – நயன்தாரா



**சென்னை : டிச. 10,**

**"லேடி சூப்பர் ஸ்டார் என சொல்லாதீர்கள். அப்படிச் சொன்னாலே திட்டுகிறார்கள்" என நடிகை நயன்தாரா கூறியுள்ளார்.**

நிலேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் நயன்தாரா, ஜெய் நடித்துள்ள 'அன்னபூரணி' திரைப்படம் வெளியாகி திரையரங்குகளில் திரையிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், படம் குறித்து படக்குழுவினர் பேட்டி அளித்துள்ளனர். அதில் பேசிய நயன்தாரா, "லேடி சூப்பர் ஸ்டார் என்று சொல்லாதீர்கள், அது சொன்னாலே என்னைத் திட்டுகிறார்கள். இன்னும் நான் அந்த இடத்துக்கு வரவில்லையா அல்லது பெண் என்ற காரணத்தினால் அது இருக்கக் கூடாது என நினைக்கிறார்களா எனத் தெரியவில்லை.

'லேடி சூப்பர் ஸ்டார்' என பத்து பேர் பெருமையாக சந்தோஷமாக சொல்கிறார்கள் என்றால் ஐம்பது பேர் திட்டுகிறார்கள். நான் செய்ய விரும்பும் கதைகள் எதுவும் அந்த டேகுக்காக கிடையாது. ரசிகர்கள் கொடுத்திருக்கும் அன்புக்காகத் தான் அதை எடுத்துக் கொண்டேன்" என்றார்.

அதில் பேசிய நடிகர் ஜெய், "அந்த 50 பேர் திட்டிக் கொண்டுதான் இருப்பார்கள். நான் சமீபத்தில் ஒரு திருமணத்துக்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கே ஒருவர், 'அடுத்து நீங்கள் லேடி சூப்பர் ஸ்டாருடன் தானே நடிக்கிறீர்கள்?' என கேட்டனர். ஆக அந்தப் பட்டம் நயன்தாராவுக்காகவே கொடுக்கப்பட்டது" என்றார். தனது 75-ஆவது படத்தை முன்னிட்டு நடிகை நயன்தாரா பேட்டியளித்துள்ளார்.

# முட்டை, முட்டையாக அரிசி வழங்கிய நடிகர்கள் பாலா, அமுதவாணன்



**சென்னை : டிச. 10,**

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பள்ளிக்கரணை மற்றும் துரைப்பாக்கம் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ₹3 லட்சம் செலவில் நிவாரணப் பொருட்களை நடிகர் பாலா மற்றும் அமுதவாணன் இணைந்து வழங்கியுள்ளனர்.**

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் மூன்று நாட்களாகியும் வடியவில்லை. குடியிருப்புகளை தண்ணீர் சூழ்ந்துள்ளதால் மக்கள் வெளியே வர முடியாமலும் உணவு உள்ளிட்டவை கிடைக்காமலும் அவதிப்பட்டு வருகின்றனர். அவர்களை மீட்கவும், அவர்களுக்குத் தேவையான பால், உணவு உள்ளிட்ட பொருட்களை வழங்கவும் தன்னார்வலர்கள் பலரும் களமிறங்கியுள்ளனர்.

இந்த நிலையில், சின்னத்திரை நடிகர்கள் பாலா மற்றும் அமுதவாணன் ஆகியோர் பள்ளிக்கரணை மற்றும் துரைப்பாக்கம் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ரூ.3 லட்சம் செலவில் நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

பள்ளிக்கரணையில் உள்ள 120 குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசியும், துரைப்பாக்கம் பல்லவன் நகரில் உள்ள மக்களுக்கு நைட்டி, லுங்கி உள்ளிட்ட ஆடை மற்றும் உதவித் தொகையை வழங்கினர்.



வரலாறு உலகம்

# சிங்கப்பூரில் தாண்டவமாடும் கொரோனா மீண்டும் கட்டுப்பாடுகள் விதிப்பு



**சிங்கப்பூர் : டிச. 10,**

**சிங்கப்பூரில் கடந்த ஒரே வாரத்தில் புதிதாக 32,035 பேர் கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது கடந்த வாரத்தை ஒப்பிடுகையில் 10 மடங்கு அதிகம் என அந்நாட்டு சுகாதாரத்துறை கவலை தெரிவித்து, எச்சரித்துள்ளது.**

2019-ல் முதன் முதலாக சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸானது பின்னர் உலகையே ஆட்டி படைத்தது. முகக் கவசம், தடுப்பூசி உள்ளிட்ட நடவடிக்கைகளால் அவற்றின் பாதிப்பு குறைந்தது. இதனால் பல நாடுகளில் தற்போது இயல்பு நிலை திரும்பி உள்ளது. ஆனால் சிங்கப்பூரில் இதற்கு மாறாக கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. அதாவது கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அங்கு 32 ஆயிரத்து 35 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் ''கடந்த ஆண்டை போல இன்னொரு கொரோனா அலை இங்கு வரலாம். எனவே முகக் கவசம், தடுப்பூசி போடுதல் போன்ற நடவடிக்கைகளை தீவிரமாக கடைபிடிக்க வேண்டும்'' என அந்த நாட்டு சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

# பெண் கல்வி மறுப்புதான் உலகம் நம்மிடமிருந்து விலகியிருக்கிறது : தலிபான் அமைச்சர்



**ஆப்கானிஸ்தான் : டிச. 10,**

**''தலிபான்களை விட்டு உலகமும், பொதுமக்களும் தள்ளி நிற்பதற்கு, பெண் கல்விக்கு எதிராக நாம் விதித்து வரும் தொடர்ச்சியான தடையே காரணம்" என ஆப்கானிஸ்தானின் துணை வெளியுறவுத்துறை அமைச்சர் ஷேர் முகமது அப்பாஸ் ஸ்டானிக்சாய் கூறியுள்ளார்.**

தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானை, 2021ல் மீண்டும் தலிபான்கள் அதிரடியாக கைப்பற்றி ஆட்சி செய்து வருகின்றன. இங்கு, பெண்களுக்கு எதிராக பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பெண்கள் பள்ளி, கல்லூரிகளுக்கு சென்று படிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அழகு நிலையங்கள் நடத்தவும் அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது.

விவாகரத்து செய்யப்பட்ட பெண்கள் பலர், அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக தொடர் புகார்கள் எழுந்துள்ளன. இந்நிலையில், தலிபான்களால் நியமிக்கப்பட்ட அந்நாட்டு துணை வெளியுறவுத் துறை அமைச்சர் ஷேர் முகமது அப்பாஸ் ஸ்டானிக்சாய், சமீபத்தில் அங்கு நடந்த பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றார். அப்போது பெண் கல்விக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அவர் பேசினார்.

"அறிவில்லாத சமூகம், இருண்ட சமுதாயத்துக்கு சமமானது. ஆறாம் வகுப்புக்கு மேல் பெண்கள் படிக்க வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்று. அவர்களுக்கான பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட வேண்டும். இது, அவர்களுக்கான உரிமை. கடவுளால் அவர்களுக்கு வழங்கப்பட்ட இயற்கையான உரிமை. இதை, அவர்களிடம் இருந்து யாரால் பறிக்க முடியும்? இந்த உரிமையை மீறுவது, ஆப்கானியர்களுக்கும், இந்த மக்களுக்கும் எதிரான அடக்குமுறையாகும்.

கல்வி நிறுவன கதவுகள் மீண்டும் திறக்கப்பட வேண்டும். அண்டை நாடுகளுடனும், உலகத்துடனும் நமக்கு இருக்கும் ஒரே பிரச்சினை கல்வி தான். தேசம் நம்மைவிட்டு துாரமாக இருப்பதற்கும் கல்விப் பிரச்சினை தான் காரணம். அது தீர்க்கப்பட வேண்டும்" என்று கூறினார்.

# 5 லட்சம் ஆப்கானிஸ்தான் அகதிகள் வெளியேற்றப்பட்டனர் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் தகவல்



**இஸ்லாமாபாத் : டிச. 10,**

**தங்கள் நாட்டில் உரிய ஆவணங்கள் இல்லாமல் தங்கியிருந்த சுமார் 5 லட்சம் ஆப்கன் அகதிகள் வெளியேற்றப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சர்ஃப்ராஸ் புக்தி கூறினார்.**

இது குறித்து இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது: நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 4.82 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆப்கானியர்கள் கடந்த 2 மாதங்களில் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிவிட்டனர். அவர்களில் 90 சதவீதத்தினர் தாமாக முன்வந்து ஆப்கானிஸ்தானுக்குச் சென்றுள்ளனர்.

பாகிஸ்தானில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்தும் உள்நாட்டு அரசியலில் பங்கேற்ற 10 ஆப்கன் நாட்டவர்களை அவர்களது தாயகத்துக்கு நாடு கடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பாகிஸ்தான் அரசியல் உள்நாட்டினர் மட்டுமே ஈடுபட வேண்டும். வெளிநாட்டினர் ஈடுபட்டால் அவர்கள் உடனடியாக வெளியேற்றப்படுவார்கள் என்றார் அவர்.

கடந்த 1979-89-ல் ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியன் ஆக்கிரமித்ததிலிருந்தே அந்த நாட்டைச் சோந்த சுமார் 17 லட்சம் அகதிகளுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் அளித்துள்ளது. இருந்தாலும், அண்மைக் காலமாக ஆப்கன் எல்லையையொட்டிய பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகவும், இதில் ஆப்கன் அகதிகள் அதிக அளவில் பங்கேற்பதாகவும் பாகிஸ்தான் அரசு குற்றஞ்சாட்டி வருகிறது.

அதையடுத்து, உரிய ஆவணங்கள் இல்லாமல் நாட்டில் தங்கியிருப்பவர்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கு மனித உரிமை அமைப்புகளும், ஐ.நா. அகதிகள் நல அமைப்பும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்தச் சூழலில், கடந்த 2 மாதங்களில் மட்டும் சுமார் 5 லட்சம் ஆப்கன் அகதிகள் நாட்டை விட்டு வெளியேறியதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் தற்போது கூறியுள்ளார்.

# இலங்கைக்கு ரூ.1660 கோடி கடன் ஆசிய வளர்ச்சி வங்கி அனுமதி

**இலங்கை : டிச. 10,**

**பொருளாதார நெருக்கடியில் சிக்கிய இலங்கை தற்போது மீண்டு வருகிறது.**

அந்நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கியது. இதில் முதல் தவணை வழங்கப்பட்ட நிலையில் 2-வது தவணைக்காக இலங்கை காத்திருக்கிறது.

இந்த நிலையில் இலங்கையின் நிதித்துறையை ஸ்திரப்படுத்த உதவ அந்நாட்டுக்கு ரூ.1668 கோடி கடனுதவி வழங்க ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்தது. நாட்டின் வங்கி துறையில் ஸ்திரத்தன்மை, மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்தவும், பெண்கள் தலைமையிலான சிறு, குறு, நிலையான நிதியை மேம்படுத்தவும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.



# ஐ.நா கொண்டு வந்த போர் நிறுத்த தீர்மானம் நிராகரித்தது அமெரிக்கா



**வாஷிங்டன் : டிச. 10,**

**இஸ்ரேல்-ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா. கொண்டு வந்த தீர்மானத்தை அமெரிக்கா நிராகரித்தது.**

ஐ.நா. கொண்டு வந்த தீர்மானத்தை தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அமெரிக்கா நிராகரித்தது. தீர்மானத்திற்கு ஆதரவாக 13 நாடுகள் வாக்களித்த நிலையில் வாக்கெடுப்பில் இங்கிலாந்து பங்கேற்கவில்லை. பாலஸ்தீனம் காசாவில் உள்ள ஹமாஸ் இயக்கத்திற்கும் இஸ்ரேல் படையினருக்கும் இடையே போரால் இஸ்ரேல் தீவிர தாக்குதலை முன்னெடுத்து வருகிறது. 2 மாதமாக நடைபெற்று வரும் இந்த போர் காரணமாக காசாவில் மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் இஸ்ரேல் ஹமாஸ் இடையே போர் நிறுத்த பேச்சு வார்த்தையை பல்வேறு நாடுகளும் முன்னெடுத்தன. இதையடுத்து ஐக்கிய நாடுகள் அவையில் போர் நிறுத்த தீர்மானத்துக்கு ஐநா சபையின் பொதுச்செயலாளர் அழைப்பு விடுத்தார். அதில் காசாவில் போர் நிறுத்திருக்கு ஆதரவாக 13 நாடுகள் வாக்களித்த நிலையில் ஐநா பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் நிறைவேற்றியது. ஹமாஸ்-இஸ்ரேல் போரை முடிவுக்கு கொண்டு வரும் தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி நிராகரித்தது.

ஹமாஸ் அமைப்பிடம் 100க்கும் மேற்பட்ட பிணைக்கைதிகள் இருக்கும் நிலையில் இந்த தீர்மானம் ஹமாஸின் கைகளில் அதிகாரத்தை அளிக்கும் என தெரிவித்து இந்த தீர்மானத்திற்கு அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரம் மூலம் மறுப்பு தெரிவித்து நிராகரித்துள்ளது. இது தொடர்பாக ஐநாவுக்கான அமெரிக்காவின் தூதர் ராபர்ட் ஆட் போர் நிறுத்தம் மற்றொரு போரை உருவாக்கும், ஏனென்றால் தீர்வை காண ஹமாஸ் விரும்பவில்லை என தெரிவித்துள்ளார்.

இதுவரை இப்போரில் காசாவில் 16,200க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 70 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள். இப்போரில் 42,000க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்று காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# ஹமாஸ் அமைப்புக்கு இந்தியாவில் தடையா? மத்திய அமைச்சர் விளக்கம்



**புதுடில்லி : டிச. 10,**

**ஹமாஸ் அமைப்புக்கு தடை என எந்த ஒப்புதலும் நான் அளிக்கவில்லை என்று மத்திய இணையமைச்சர் மீனாட்சி லேகி தெரிவித்துள்ளார்.**

இஸ்ரேல் பாலஸ்தீனம் இடையே நீண்ட காலமாக பிரச்சினை இருந்து வருகிறது. இஸ்ரேல் எல்லையில் உள்ள காசா முனையில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர். இவர்களை ஒரு சில நாடுகள் பயங்கரவாத அமைப்பு என்று அழைத்த போதிலும், பெரும்பாலான நாடுகள் அவ்வாறு அறிவிக்கவில்லை. காசாவில் ஹமாஸ் தனியாக ஆட்சி அதிகாரம் செய்து வருகிறது.

இந்த நிலையில்தான் அக்டோபர் மாதம் 7-ம் தேதி இஸ்ரேல் நாட்டிற்குள் நுழைந்து எதிர்பாராத வகையில் கொடூர தாக்குதல் நடத்தினர். இதனால் ஹமாஸ் அமைப்பினரை பகிரங்கமாக பயங்கரவாத அமைப்பு என அறிவிக்க வேண்டும் என இஸ்ரேல் உலக நாடுகளை வற்புறுத்தி வருகிறது. ஹமாஸ் தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்தது. இஸ்ரேலுக்கு துணை நிற்பதாக இந்திய பிரதமர் தெரிவித்தார். இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர், இந்தியா ஹமாஸை பயங்கரவாத அமைப்பு என அறிவிக்க வேண்டும் என நேரடியாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த நிலையில்தான் பாராளுமன்றத்தில் ஹமாஸ் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என அறிவிக்கப்பட வேண்டும் என்ற கேள்விக்கு மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் மீனாட்சி லெகி எழுத்துப்பூர்வமாக பதில் அளித்ததாகவும், கடிதம் ஒன்று வெளியானது. இந்த கடிதத்தை மேற்கோள்காட்டி, இந்தியாவில் ஹமாஸ் அமைப்பை தடைசெய்யும் முன்மொழிவு ஏதேனும் உள்ளதா? என ஒருவர் மீனாட்சி லெகியை டேக் செய்து கேட்டிருந்தார்.

இதற்கு பதில் அளித்த மீனாட்சி லெகி, "உங்களுக்கு தவறாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கேள்வி மற்றும் பதிலுடன் நான் எந்த பேப்பரிலும் கையெழுத்திடவில்லை" என வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் மற்றும் பிரதமர் பிரதமர் அலுவலகத்தை டேக் செய்து பதில் அளித்துள்ளார். ஹமாஸ் அமைப்பு குறித்த பதில் தமது ஒப்புதல் இன்றி வெளியாகியுள்ளதாக மீனாட்சி லேகி சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும், இந்தியாவில் ஹமாஸ் அமைப்புக்கு தடை விதிக்கப்படுமா என மக்களவையில் கேரள எம்பி கேள்வி எழுப்பியிருந்தார். கேரள எம்பி சுதாகரனின் கேள்விக்கு வெளியுறவுத்துறை இணையமைச்சர் மீனாட்சி லேகி சார்பில் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்திருந்தார். ஒரு அமைப்பு சட்டவிரோத நடவடிக்கைதடுப்புசட்டத்தின் கீழ் உள்ளதா என்பதை அந்தந்த துறை சார்ந்து முடிவெடுக்க வேண்டும் என பதில் அளித்திருந்தார்.

# யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்றதற்கு இந்தியர்கள் கர்பா நடனமாடி அமெரிக்காவில் உற்சாகம்



**நியூயார்க் : டிச. 10,**

**யுனெஸ்கோவின் கலாச்சார பாரம்பரிய பட்டியலில் குஜராத்தின் கர்பா நடனத்துக்கு இடம் கிடைத்துள்ளது.**

இதனை கொண்டாடும் விதமாக, இந்திய-அமெரிக்க சமூகத்தினர் நியூயார்க் நகரத்தின் டைம்ஸ் சதுக்கத்தில் உறைபனியையும் பொருட்படுத்தாது ஒன்றுகூடி கர்பாநடனம்ஆடிமகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதுகுறித்து இந்திய தூதரக அதிகாரி வருண் ஜெப் கூறுகையில், " குஜராத்தின் கர்பா நடனத்தை அமெரிக்க மண்ணில் கொண்டாடுவது ஒரு முக்கியமான வரலாற்று நிகழ்வு. இது, இந்தியாவின் பன்முகத்தன்மையையும், பாரம்பரியகலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் நிகழ்வு. இந்தியாவின் பல கலாச்சார கூறுகள் யுனெஸ்கோ பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றார்.

கர்பாவை யுனெஸ்கோ பட்டியலில் சேர்க்க இந்திய அரசு எடுத்த முயற்சிகளுக்கும், பிரதமர் மோடிக்கும் இந்திய சங்கங்களின் கூட்டமைப்பு (எப்ஐஏ) தலைவர் அங்குர் வைத்யா நன்றி தெரிவித்தார்.

# ஈராக்கில் பல்கலைக்கழக விடுதியில் தீ விபத்து : 14 பேர் பலி

**ஈராக் : டிச. 10,**

**ஈராக்கின் வடக்கு பகுதியான எர்பில் உள்ள சோரன் பகுதியில் பல்கலைக்கழகம் ஒன்று செயல்பட்டு வருகிறது.**

அங்குள்ள விடுதியில் ஏராளமான மாணவர்கள் தங்கி உள்ளனர். இந்த நிலையில் பல்கலைக்கழக விடுதியில் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது. அங்குள்ள ஒரு அறையில் தீப்பிடித்து மற்ற அறைகளுக்கு வேகமாக பரவியது.

கட்டிடத்தின் 3-வது மற்றும் 4-வது தளங்களில் தீ கொளுந்து விட்டு எரிந்தது. இதனால் மாணவர்கள், விடுதி ஊழியர்கள் வெளியே ஓடினர். ஆனால் பலர் கட்டிடத்துக்குள் சிக்கி கொண்டனர். தீயணைப்பு வீரர்கள் வந்து கடுமையாக போராடி தீயை அணைத்தனர். இந்த தீ விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயம் அடைந்தனர். முதல் கட்ட விசாரணையில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



# அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டி விளாடிமிர் புதின் அறிவிப்பு



**ரஷ்யா : டிச. 10,**

**ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெறும் அதிபர் தேர்தலிலும் போட்டியிட உள்ளதாக அதிபர் விளாதிமிர் புதின் அறிவித்துள்ளார்.**

ரஷ்யாவில் கடந்த 1999 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2008 ஆம் ஆண்டு வரை விளாதிமிர் புதின் அதிபராக பதவிவகித்தார். அடுத்தடுத்து 4 ஆண்டுகளுக்கு பிரதமராக இருந்த அவர், மீண்டும் அதிபராக தேர்வுசெய்யப்பட்டு, தற்போது வரை நீடித்து வருகிறார்.

அடுத்த ஆண்டு மார்ச் 17ஆம் தேதி ரஷ்யாவில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், மூத்த ராணுவ அதிகாரிகளுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட புதினிடம் மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று ராணுவ அதிகாரி அட்டியோம் சோகா கேட்டுக் கொண்டார். அப்போது, தேர்தலில் போட்டியிட உள்ளதை புதின் உறுதிசெய்தார்.

உக்ரைனுக்கு எதிரான போர், 10 மாதங்களாக நீடித்துவரும் நிலையில், இது புதினுக்கான ஆதரவை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும் 80 சதவீதத்துக்கும் மேற்பட்டோரின் ஆதரவை அவர் பெற்றுள்ளதாகவும் கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. அதேநேரம், ஊழல் சர்வாதிகாரத்தை புதின் ஏற்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சிகள் ஒருபுறம் குற்றம்சாட்டி வருகின்றனர்.

# மேகங்களுக்கு நடுவே இருக்கும் 'பறக்கும் ஹோட்டல்' பார்க்க ஆச்சரியம்



**உலகச் செய்தி : டிச. 10,**

**உலகில் பல ஆடம்பரமான ஓட்டல்கள் உள்ளன. அதில் சில மிகவும் தனித்துவமானவை. பனிமலை, கடல், தனித்தீவு என வித்தியாசமான அனுபவங்களையும், சாகசத்தையும் விரும்புபவர்களை கவரும் விதத்தில் இவை கட்டப்பட்டுள்ளன.**

இதில் அடுத்தகட்டத்திற்கு போக நினைத்த ஒரு தனியார் நிறுவனம், வானில் பறக்கும் நட்சத்திர ஹோட்டலை உருவாக்கியுள்ளது. அதாவது க்ரூஸ் எனப்படும் சொகுசுக் கப்பல்களின் ஐடியாவை அப்படியே எடுத்து ஒரு ஸ்கை க்ரூஸை உருவாக்கி இருக்கிறார்கள். இதில் ஜிம் முதல் நீச்சல் குளம் வரை அனைத்து வசதிகளும் உள்ளன.

இந்த ஸ்கை க்ரூஸின் வீடியோவை ஏமன் நாட்டு பொறியாளர் ஹஷேம் அல்-கைலி தனது யூடியூப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இது குறித்து அவர் விரிவாக விளக்கியுள்ளார். இது அணுசக்தியால் இயங்கும் ஒரு பெரிய 'பறக்கும் ஓட்டல்'. இது வானத்தில் பறந்து கொண்டே இருக்கும். இதில் ஒரே நேரத்தில் 5,000 பயணிகள் தங்க முடியும். காற்றில் பறக்கும் மேகங்களுக்கு மத்தியில் இருப்பது யாரையும் சிலிர்க்க வைக்கும். உடற்பயிற்சி கூடம் முதல் நீச்சல் குளம் வரை அனைத்து வசதிகளும் இதில் இருக்கும்.

இந்த பறக்கும் ஓட்டல் ஆடம்பரத்தின் சின்னமாக பார்க்கப்படுகிறது. உள்ளே இருந்து பார்த்தால் 5 நட்சத்திர ஓட்டல் போல தோன்றும். இதில், வணிக வளாகம், பார், உணவகம், விளையாட்டு வளாகம், தியேட்டர் ஆகியவற்றுடன், குழந்தைகள் விளையாடும் மைதானமும் கட்டப்பட்டுள்ளது. ஒரு மாநாட்டு மையமும் இருக்கும். அங்கு எந்த நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்யலாம்.

மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த ஸ்கை க்ரூஸ் முற்றிலும் அணுசக்தியால் இயக்கப்படுகிறது. இதற்கு விமானம் போல் எரிபொருளை நிரப்ப வேண்டிய அவசியமே இருக்காது. அணுஎரிபொருளாக இருப்பதால், அது எப்போதும் காற்றில் பறந்து கொண்டே இருக்கும். அதன் பராமரிப்பும், பழுது நீக்கும் பணியும் வானிலேயே செய்யப்படும்.

# இத்தாலி : மருத்துவமனையில் பயங்கர தீ விபத்து 4 பேர் பலி



**ரோம் : டிச. 10,**

**மருத்துவமனையில் இருந்த நோயாளிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.**

இத்தாலி தலைநகர் ரோம் அருகே டிவொலி பகுதியில் மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. மருத்துவமனையின் மேல்தளத்தில் தீ வேகமாக பரவியது. இந்த தீ விபத்து குறித்து தீயணைப்பு, மீட்புக்குழுவினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் மருத்துவமனையில் சிக்கித்தவித்த நோயாளிகளை அவசர அவசரமாக வெளியேற்றினர். ஆனாலும் இந்த தீ விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும், சிலர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 6000 நிவாரண உதவித்தொகை

# பெட்ரோல் குண்டு; ரவுடி கருக்கா வினோத்தை 5 நாள் காவலில் விசாரிக்க என்.ஐ.ஏ. மனு






# சமூக வலைத்தளங்களின் வளர்ச்சியால் உலகம் முழுவதும் வெறுப்புணர்வு அதிகரித்துள்ளது


| சென்னை / புதுக்கோட்டை | 10.12.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

புதுமை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரி , இந்திய அரசியல்வாதி, இந்தியாவின் 45வது ஆளுநர், எழுத்தாளர் (பி.1878) (இ.1992)



எஸ். நிஜலிங்கப்பா , இந்திய அரசியல்வாதி (பி.1902) (இ.2000)



மாணிக்க விநாயகம் , இந்திய திரைப்பட இசையமைப்பாளர் (பி.1943)



## இன்றைய நினைவு நாள்

சிற்றம்பலம் கார்டினர் , இலங்கைத் தொழிலதிபர், தயாரிப்பாளர் (பி.1899) (இ.1960)



ஸ்ரீகண்டதத்த நரசிம்மராஜ உடையார் , இந்திய அரசியல்வாதி (பி.1946) (இ.2013)



வா. செ. குழந்தைசாமி , இந்தியப் பொறியியல் அறிஞர், கவிஞர் (பி.1929) (இ.2016)



## மனித உரிமைகள் நாள்